

# சர்வதேசிய மாற்றங்கள் குறித்து
# மற்றும்
# மார்க்சிய-லெனினிய சக்திகளின் கடமைகள்

**இ.க.க. (மா.லெ.) ரெட்:பிளாக்**
**நான்காம்**
**அனைத்திந்திய மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

நிலனி

# சர்வதேசிய மாற்றங்கள் குறித்து மற்றும் மார்க்சிய-லெனினிய சக்திகளின் கடமைகள்

**இ.க.க. (மா.லெ.) ரெட்ஃபிளாக்**
**நான்காம்**
**அனைத்திந்திய மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

CPI (ML) ரெட்ஃபிளாக்
தமிழ்நாடு மாநில கமிட்டி
சார்பாக வெளியிடுபவர் :

தி. சிலப்பதிகாரம்
எண்.1, முதல் தெரு,
சோமசுந்தர பாரதி நகர்
வடபழனி, சென்னை - 600 026.
தொலைபேசி : 481 4850

வெளியிடும் காலம் : அக் : 1998

## முன்னுரை

1997, ஏப்ரல் மாதத்தில் நடந்த நான்காம் அனைத்திந்திய மாநாட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசிய மாற்றங்கள் குறித்த இந்த ஆவணமானது இன்றைய சர்வதேச சூழலின் அடையாளமானது ஏகாதிபத்தியமுறை, வளரும் நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருக்கிறது என்ற அடிப்படைக் கூற்றிலிருந்தும், பாட்டாளி வர்க்க சக்திகளின் முன்னேற்றத்திற்கு சாதகமான புறநிலைமைகள் மேலும் அதிகமான அளவிற்கு பெருகிக் கொண்டிருக்கிறது என்பதிலிருந்தும் தொடங்குகிறது. உலகளாவிய அளவில் ஏகாதிபத்திய முறை முன்தள்ளியுள்ள சவால்களை சந்திப்பதற்கு சர்வதேச கம்யூனிச இயக்கத்தை (ICM) புனரமைக்க வேண்டும் என்ற ஒரு பொது இணக்கமும் கூட சர்வதேச அளவில் உள்ள மார்க்சிய-லெனினிய சக்திகளுக்கிடையில் ஏற்பட தொடங்கியுள்ளது. இத்தகைய கூற்றுக்களிலிருந்து இந்த ஆவணம் இன்றைய சர்வதேச சூழலைப் பற்றிய பகுப்பாய்வு குறித்து ஒரு அடிப்படை அணுகுமுறையை முன் வைத்துள்ளது. மேலும் கடந்த 50 ஆண்டு கால சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் மற்றும் கோமின்டர்ன் கலைக்கப்பட்டு விட்ட பிறகான கம்யூனிச இயக்கத்தின் அனுபவங்களை மதிப்பீடு செய்வதற்கான ஒரு தொடக்கத்தையும், ஒரு புதிய கம்யூனிஸ்டு அகிலத்தை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளையும் இந்த ஆவணம் முன் வைக்கின்றது.

இரண்டாவது உலக யுத்த சமயத்தில் நிகழ்ந்த சர்வதேசிய இயக்கத்தின் பின்னடைவுக்குறித்த துயர்களுக்கு மார்க்சிய லெனினிய விடைகளை தேடியவாறும், இந்திய பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக விளங்கிய இ.க.க. (மா.லெ.)-வை மறு சீரமைக்கும் நோக்கத்தை பிரகடனப்படுத்தியும் முன்னர் சி.ஆர்.சி. இ.க.க. (மா.லெ.) என்று அழைக்கப்பட்ட நமது அமைப்பானது 1979-ல் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே செயல்பட்டது. ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளிவர்க்க புரட்சியின் இந்த சகாப்தத்தில் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் அனுபவங்களை மதிப்பீடு செய்வது மற்றும் அதன் படிப்பினைகளை எடுத்துக் கொள்வது ஆகியவற்றின் பகுதியாக மட்டுமே இந்திய கம்யூனிஸ்டு இயக்கத்தின் பின்னடைவுக்கான துயர்களை மதிப்பீடு செய்யவும் அதன் கருத்தியல் - அரசியல் - அமைப்பியல் வழியை வளர்த்தெடுக்கவும் இயலும். இன்றைக்கு வந்தடைந்திருக்கும் தெளிவானது முன்னர் பல்வேறு பிரச்சினைகளில் அடையாமல் இருந்த போதிலும் கூட, 1970களில் குருச்சேவின் நவீன திரிபுவாதத்திற்கும் லின்பியோவின் குறுங்குழு வாதத்திற்கும் எதிராக நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சியாக நாம் டெங்கியம் மற்றும் ஹோக்சாவியம் ஆகியவற்றுக்கு எதிராக போராடியதானது மார்க்சிய-லெனினிய அணுகுமுறை அடிப்படையிலான ஒரு ஆக்கபூர்வமான தொடக்கமாக இருந்தது.

உலக பாட்டாளி வர்க்கத்திற்கு இரண்டாவது உலக யுத்த உடனடியான ஆண்டுகளின் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் சித்திரமானது மாபெரும் உத்வேகத்தை அளிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்த நிலையிலிருந்து அனைத்து சோசலிச நாடுகளும் சீரழிந்து பின்னடைவுகளுக்குள்ளான இன்றைய நிலைமையானது தீவிர மதிப்பீட்டை வேண்டுகிறது. இந்த மதிப்பீடானது உலக மேலாதிக்கத்தை தொடர்வதற்காக ஏகாதிபத்தியமானது இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகு கையாண்ட நவீன காலனியாதிக்கத்தின் புதிய தந்திரங்களை துல்லியமாக பகுப்பாய்வு செய்வதன் மூலம் தொடக்கப்பட வேண்டும். இன்றைக்கு இது தலையாய முக்கியத்துவம் பெறுவது ஏன் எனில் இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகான

காலகட்டத்தில் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் நவீன திரிபுவாதம், குறுங்குழுவாதம் ஆகிய இரண்டின் தோற்றுவாயாக இன்றைய சகாப்தம்-ஏகாதிபத்தியமும் பாட்டாளிவர்க்க புரட்சியும் ஆன சகாப்தம்-குறித்த கொச்சைப் படுத்தப்பட்ட புரிதல்களுடன், ஏகாதிபத்தியமானது அதன் நவீன காலனிய இடைக்கட்டத்தில் இருப்பது பற்றிய தவறான அணுகுமுறைகளும் இருப்பதனால் ஆகும். எப்போது சோசலிச சக்திகள் குறிப்பான நிலைமை பற்றிய குறிப்பான ஆய்வில் தோல்வி அடைகிறார்களோ மேலும் பாட்டாளி வர்க்க புரட்சி பாதையிலிருந்து விலகிச் செல்கிறார்களோ அப்போது ஏகாதிபத்திய முகாமுக்கு சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் மீது எதிர்புரட்சிகர தாக்குதல்களை கூர்மையடையச் செய்வதும் அதை மோசமான பின்னடைவுகளுக்கு உள்ளாக்குவதும் எளிமையாக ஆகிவிடுகிறது.

இன்றைய குருச்சேவிய நவீன திரிபுவாதம் டெங்கிய சந்தை சோசலிசம் என்ற புதிய வடிவத்தை தரித்துக் கொண்டுள்ளது. இதை எதிர்த்து சமரசமற்ற போராட்டத்தை தொடர்ச்சியாக நடத்தி வேர் அறுக்காவிட்டால் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தை முன்னேறச் செய்ய இயலாது. ஆனால் கடந்த காலத்தைப் போலவே இப்போதும் வாழ்வுக்கும் சாவுக்குமான இந்த போராட்டத்தில் குறுங்குழுவாதம் கூட தடைகளை உருவாக்கி வருகிறது. எனவே சோசலிச சக்திகள் திரிபுவாதம் மற்றும் குறுங்குழுவாதம் ஆகிய இரண்டிற்கும் எதிரான போராட்டத்தின் மூலம் மட்டுமே இன்றைய பின்னடைவுகளை கடந்து செல்ல முடியும். இந்த போராட்டம் ஏகாதிபத்தியம் அதன் நவீன காலனியாதிக்க இடைக்கட்டத்தின் குறிப்பான ஆய்வை முன்னேறச் செய்யவும், இந்த இடைக்கட்டத்தில் ஏகாதிபத்தியத்தை முறியடிக்க யுத்ததந்திரத்தையும் செயல் தந்திரத்தையும் வளர்க்கவும் உதவும். மேலும் இதன் கூடவே இந்த குறிப்பான படிப்பில் ஏற்படும் முன்னேற்றமானது மேலே கண்ட இரண்டு அந்நிய போக்குகளுக்கு எதிரான போராட்டத்திற்கும் கூட உதவும்.

எப்பொழுது மார்க்சிய - லெனினிய சக்திகள் கம்யூனிஸ அகிலத்தை மீண்டும் கட்டுவதற்கான தேவையையும் அவர்களது சொந்த நாடுகளில் புரட்சிகர போராட்டங்களை முன்னேற செய்வதையும் உணர்வு பூர்வமாக உணரத்தலைப்பட்டார்களோ அப்போது கடந்த கால அனுபவங்களை சரியாக ஆய்வு செய்வதும் பாதையை வகுத்துக் கொள்வதும் அவசியம் என்பது தலையாய முக்கியத்துவம் பெறுகிறது. இத்தகையதொரு பின்னணியில் இந்த ஆவணமானது சர்வதேசிய கம்யூனிஸ தலையாய இயக்கத்தின் புரட்சிகர மூலத்தினை மேலும் வளர்ப்பதற்கான பாதையை மார்க்சிய லெனினிய அணுகுமுறையின் அடிப்படையில் தொடங்கி வைக்கிறது என்பதாக அணுகப்பட வேண்டும்.

கோமிண்டர்னின் அடிப்படை நிலைபாடுகளின் இருந்தும் மாபெரும் விவாதத்தின் பகுதியாக சீனக்கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த பொதுவழியின் அடிப்படையிலிருந்தும் இவற்றின் தொடர்ச்சியாக குறிப்பான நிலைமைகள் பற்றிய குறிப்பான ஆய்வின் அடிப்படையிலும் சர்வதேசிய கம்யூனிஸ இயக்கமானது மறுசீரமைப்பு செய்யப்படவேண்டும் என்ற தலையாய நிலைபாட்டை இந்த ஆவணமானது எடுத்துள்ளது. இத்தகைய வழியில் மட்டுமே சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தை பலவீனப்படுத்திய வலது சந்தர்ப்பவாதம் மற்றும் குறுங்குழுவாதம் போன்றவை முறியடிக்கப்பட இயலும். இந்த பின்னணியில்தான் வலது சந்தர்ப்ப வாதம் மற்றும் குறுங்குழுவாதம் ஆகிய இரண்டிற்கும் அடிப்படையாக இருந்த முதன்மை முரண்பாடு பற்றிய தவறான புரிதல் திருத்தப்பட்டுள்ளது. மேலும் சர்வதேசிய அளவில்

அடிப்படையான முரண்பாடுகள் பற்றிய மார்க்சிய லெனினிய புரிதல் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது. அடிப்படை முரண்பாடுகள் மற்றும் அவற்றால் உயர்ந்து செல்லும் போராட்டங்கள் ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையது செல்வாக்கு செலுத்துவதும் ஆகும். அடிப்படை முரண்பாடுகள் வர்க்கப் போராட்டங்களை கூர்மையாக்கி எழச் செய்வதால் புரட்சிகள் மட்டுமே அவற்றிற்கான தீர்வாக இருக்க முடியும். இத்தகைய முரண்பாடுகளில் எதையாவது ஒன்றை இல்லை என்று கருதினாலோ அல்லது அகவய ரீதியில் ஒன்றை மற்ற அனைத்துக்கும் கீழ்படுத்தினாலோ இரண்டாவது உலகயுத்தத்திற்கு பிறகான காலகட்டத்தில் நிரூபிக்கப்பட்டது போல் திரும்ப திரும்ப தீவிரமான விலகல்களுக்கு இட்டுச் செல்லும். எனவே உலக அரசியல் மற்றும் பொருளாதாரத்தை முழுமையாக எடுத்துக் கொண்டு குறிப்பான வர்க்க ஆய்வின் தொடக்கமும் நிகழ்கால உலகில் உள்ள அடிப்படை முரண்பாடுகள் குறித்த யதார்த்தமான இன்றைய உலக நிலைமைகளின் மார்க்சிய லெனினிய அணுகுமுறையும் மீண்டும் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறாக சர்வதேசிய கம்யூனிச இயக்கம் சந்திக்கிற குறிப்பான பிரச்சினைகள் பற்றிய குறிப்பான ஆய்வு என்பதிலிருந்து தொடங்கியும் அதனுடைய பகுதியாக இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் உள்ளதென்ற அடிப்படையிலும் கடந்தகால தவறுகளை திருத்துவதில் வளர்ச்சியையும் ஒரு பொதுப்பாதையை வளர்ப்பதற்கான முன்முயற்சியை இன்றைய சூழலில் கட்டவிழ்த்து விடுவதிலும் இந்த ஆவணம் அடிப்படை மூலங்களை அளித்துள்ளது. இந்த மூலாதாரத்தை,சர்வதேசிய அளவிலும் நாட்டிலும் புரட்சிகர தத்துவம் மற்றும் நடைமுறை ஆகியவற்றின் புரிதலின் வளர்ச்சியின் ஊடாக வரும் ஆண்டுகளில் மேலும் செழுமைப்படுத்த இயலும்.

இந்த தொலைநோக்குடன் ''சர்வதேசிய மாற்றங்கள் மற்றும் மார்க்சிய லெனினிய சக்திகளின் கடமைகள்'' என்ற இந்த ஆவணத்தை நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம்.

மையபுனரமைப்பு கமிட்டி
இ.க.க.(மா.லெ.) ரெட்ஃபிளாக்
15 மே. 1997.

# சர்வதேசிய மாற்றங்கள் குறித்து
# மற்றும்
# மார்க்சிய லெனினிய சக்திகளின் கடமைகள்

## சர்வதேசிய சூழ்நிலை:

நிகழ்கால சர்வதேசிய காட்சியானது இரு முக்கிய கூறுகளால் அடையாளப்படுத்தப்படுகிறது.

முதலாவது, உலக ஏகாதிபத்திய முறை எதிர்கொள்ளும் கடுமையான நெருக்கடியாகும். மிகவும் பரவலாக பேசப்பட்ட புதிய உலக ஒழுங்கமைப்பானது ஒரு உலக ஒழுங்கின்மையாக மாறியுள்ளது. உலக அளவிலான கணக்கற்ற வளர்ச்சிகளால் நெருக்கடியிலிருந்து மீண்ட முதலாளித்துவம் என்ற கட்டுக்கதை, மிகைப்படுத்தி கூறப்படும் ஏகாதிபத்திய முறையின் சர்வ வல்லமை, ஒன்றுபடுத்தப்பட்ட ஏகாதிபத்திய முகாம் குறித்த சவடால்கள் போன்றவை அம்பலமாகி உள்ளன. உலக அளவிலான இயற்கை வளங்களையும் உழைப்பையும் கொள்ளை அடிப்பதற்காக விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் அண்மையில் பெற்ற முக்கிய வளர்ச்சிகளை பயன்படுத்திய போதிலும் கூட அனைத்து ஏகாதிபத்திய நாடுகளும் நீடித்ததும் கூர்மையானதுமான பொதுநெருக்கடியில் சிக்கியுள்ளன.

இரண்டாவதாக, பாட்டாளிவர்க்க புரட்சியை முன்னெடுத்து செல்வதிலும் தற்போதைய பின்னடைவுகளிலிருந்து மீண்டுவருவதிலும் மார்க்சிய லெனினிய சக்திகள் கடும் சவால்களை எதிர்கொண்டுள்ளனர். கருத்தியல்-அரசியல் வழி பற்றிய பிரச்சினைக்கு உச்சபட்சமான முக்கியத்துவம் அளிக்கப்படாதிருந்த பொழுதெல்லாம் சர்வதேசிய கம்யூனிச இயக்கமானது (ICM) பின்னடைவுகளால் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது என்பதை சர்வதேசிய கம்யூனிச இயக்க வரலாறு நமக்கு கற்றுத் தந்துள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் அந்நிய போக்குகள் இயக்கத்தை ஆதிக்கம் செலுத்த தொடங்குகின்றன. கடந்தகால அனுபவங்களை மதிப்பீடு செய்தல், அனைத்து அந்நிய போக்குகளுக்கு எதிராக போராடுதல், அடிப்படை மார்க்சிய லெனினிய கோட்பாடுகளின் ஆதாரத்தில் அமைந்த கருத்தியல்-அரசியல் வழியை வளர்த்தல் மற்றும் உயர்த்தி பிடித்தல் போன்றவை பாட்டாளிவர்க்க புரட்சியை முன்னெடுக்கவும் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தை முன்னெடுக்கவும் தேவைப்படுகிறது.

## ஏகாதிபத்தியத்தின் பொதுநெருக்கடி கூர்மை அடைதல்.

இரண்டாம் உலகப்போருக்கு பிறகு ஏகாதிபத்திய நாடுகள் ஒரு அதிரடி வளர்ச்சியை கண்டிருந்தாலும் அது ஒரு தற்காலிகமான நிகழ்வு போக்காக மட்டுமே இருந்தது. விஞ்ஞானம் மற்றும் தொழில் நுணுக்க வளர்ச்சி, யுத்தத்திற்கு பிறகு பெரிய அளவிலான மறுசீரமைப்பு நடவடிக்கை, பூதாகரமான ஆயுதத் தொழில் போன்றவைகளுக்கு மேலாக இந்த அதிரடி வளர்ச்சி நிலை நாட்டப்படவில்லை. ஏகாதிபத்திய நாடுகளால் பல்வேறு சமூகநலத் திட்டங்கள் சோசலிசசக்திகளிடம் இருந்து எழுந்த சவால்களை எதிர்கொள்ள நடைமுறைப்படுத்தப்பட்டன. கெய்னிசியன் வழிகளை மேற்கொண்டு உற்பத்தி சேவைகள் மற்றும் விநியோகம்

போன்ற துறைகளில் அரசு தலையீட்டை ஏகாதிபத்தியம் புகுத்தியது. இத்தகைய நடவடிக்கைகளுடன் 1950 களில் மாபெரும் அதிரடி முதலீடு செய்ததானது இயந்திரத்துறை, நுகர்வுபொருட்கள் போன்றவற்றின் தேவைக்கான உற்பத்தி திறனை பெரும் அளவுக்கு விரிவாக்கியது. ஆனால் 1960 களின் இறுதியில் இந்த அதிரடி வளர்ச்சியானது தேய்ந்துபோய் நெருக்கடி அற்ற ஏகாதிபத்தியம் என்ற சவடாலானது இல்லாமல் போய்விட்டது.

முதலாம் உலகப்போருக்கு பிறகு ஏகாதிபத்தியம் தீர்வுகாண இயலாத நெருக்கடியின் ஒரு காலகட்டத்திற்குள் நுழைந்துவிட்டது என்று மார்க்சிஸ்டுகள் மதிப்பீடு செய்தனர். முதலாளித்துவமானது தீர்வுகாண இயலாத பொது நெருக்கடியின் காலகட்டத்திற்குள் நுழைந்து விட்டதானது சோசலிச புரட்சிக்கு இட்டுச் செல்லும் என்ற கருத்தை லெனின் தனது பல்வேறுநூல்களில் வளர்த்துள்ளார். இந்த நெருக்கடியின் பின்னணியில் உள்ள பொருளாதார மற்றும் அரசியல் குறித்த ஆய்வை அளிக்க மூன்றாம் அகிலத்திற்கு அளிப்பதற்காக தயாரிக்கப்பட்ட குறிப்பில் லெனின் கூட முயன்றுள்ளார். மூலப்பொருட்கள் அற்று போதல், தொழிற்துறை பலவீனம் அடைதல், செலவாணிகளின் வீழ்ச்சி, கடன்கள் பணப் புழக்கத்தளர்வு, உலகப் பொருளாதாரத்தின் முழுமையான அமைப்பும் தடைகளால் தகர்ந்து போதல் போன்றவையும் இன்னபிறவும் இந்த நெருக்கடிக்கான பல்வேறு காரணங்களாக உள்ளதை லெனின் சுட்டிக் காட்டி உள்ளார். ( லெனின் தொகுப்பு நூல் 35, மற்றும் 451)

இவற்றுடனும் இவற்றின் விளைவாகவும் கம்யூனிஸ்ட் இயக்கமும் சோவியத் அதிகாரமும் தோன்றியதைக் கூட லெனின் சுட்டிக் காட்டி உள்ளார். முதலாளித்துவ நெருக்கடி குறித்த இந்த கண்ணோட்டத்தை லெனினுக்கு பிறகு ஸ்டாலின் மேலும் தெளிவாக விளக்கினார். ஸ்டாலின் கூறுகிறார்; தொழில்துறையின் தொடர்ச்சியான குறைவான பயன்பாட்டு செயல் நடவடிக்கை, நீடித்த வெகுஜன வேலையின்மை, விவசாயத்துறை நெருக்கடியுடன் இணைந்த தொழில்துறை நெருக்கடி அதிரடி வளர்ச்சிக்கு வழக்கமாக காரணமாக இருந்த நிலையான மூலதனமானது குறைவாகவோ அதிகமாகவோ மறுகட்டமைப்பு இல்லாமல் ஆகும் போக்குகள் போன்றவையும் இன்ன பிறவும் நெருக்கடி பற்றி தெரிவிக்கின்றன.(லெனினியத்தின் பிரச்சினைகள், பக்கம் 459)

இரண்டாவது உலகப்போருக்கு பிந்தைய இரு பத்தாண்டுகளுக்கும் குறைவான கால கட்டத்தை தவிர ஸ்டாலினது இந்த கூற்றுக்கள் சரி என நிருபிக்கப்பட்டுள்ளது. சோவியத் அனுபவத்தை பிரதி எடுத்த ஒரு கொள்கையான பொருளாதார துறையில் அரசு தலையீடும், போருக்கு பின்னர் நடைபெற்ற மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் ஒரு தற்காலிக நிலைநிற்பை ஏற்படுத்தியதை ஏற்கனவே கூறியிருந்தோம். ஆனால் இது பொது நெருக்கடிக்கு எந்த தீர்வையும் இதற்குள்ளே அளிக்கவில்லை. இதற்கு மாறாக முதலாளிய பொருளாதார முறையின் அண்மைய இயக்கங்கள் குறித்த ஆய்வானது இந்த தற்காலிக நிலைநிற்பானது இன்று வரையிலும் பயங்கர நெருக்கடியைத் தொடரச் செய்திருக்கிறது என்பதை காண்பிக்கிறது.

1971 ல் இந்த நூற்றாண்டிலேயே முதன் முறையாக அமெரிக்காவின் வணிகக் கணக்குகள் பற்றாக்குறைக்கு இட்டு சென்றன. அமெரிக்காவானது அதன் பிரெட்டன்வுட் வாக்குறுதிக்கு மாறாக டாலரின் தங்கத்துடனான பரஸ்பர பரிமாற்ற மதிப்பை ஒரு தலைப்பட்சமாக ரத்து செய்தது. தொடர்ந்து இரண்டு முறை டாலரின் மதிப்பை கீழறக்கியது. முக்கிய செலாவணிகள் ஒன்றோடொன்று மிதக்க துவங்கியதை

தொடர்ந்து ஏற்பட்ட நிரந்தரமற்ற காலசூழலில் அந்நியச் செலவாணி ஊக வாணிகர்கள் பெரும் இலாபத்தை ஈட்டியதுடன் ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதாரங்கள் பெரும் நீர் சூழல்களில் சிக்கிக்கொண்டு குழப்பங்களை சந்தித்தன.

இந்த வளரும் நெருக்கடியிலிருந்து அவர்களை காப்பாற்றிக்கொள்ளும் ஒரு முயற்சியின் பகுதியாகவே பிரிட்டனும் அமெரிக்காவும் தாட்சரியத்தையும், ரீகன் பொருளியலையும் அறிமுகப்படுத்தினர். பின்னர் இதை பிற ஏகாதிபத்திய நாடுகளும் கூட பின்பற்றினர். தற்சமயம் பொருளாதாரத்தில் அரசு தலையீடானது அதிகமாக கைவிடப்பட்டு வருகின்றது. அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும் அரசுக் கட்டுப்பாட்டு துறைகளும் தனியார்மயத்துக்கு ஆட்படுகின்றன. சமூகநலத் திட்டங்கள் வெட்டப்படுகின்றன. இந்த முறைகளின் மூலம் ஐ.எம். எப். ம், உலகவங்கியும் அமைப்பு சீர்திருத்த கொள்கையை (SAP) மேற்கொள்ளுமாறு கடனாளி நாடுகளை நிர்ப்பந்தம் செய்தன.

உலக அளவில் இயற்கை வளங்களையும் உழைப்பையும் கொள்ளையடிக்க ஏகாதிபத்திய சக்திகள் தீவிர விருப்பங்கள் கொண்டுள்ளனர். அதே சமயம் சோசலிச விருப்பங்களை கொண்டிருக்கும் மக்கள் ஏகாதிபத்திய முகாமை நேருக்கு நேர் சந்தித்து வருகிறார்கள். முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் உட்பட உலகநாடுகள் முழுவதிலும் பெருமளவு மக்கள் திரள் போராட்டங்கள் இத்தகைய ஏகாதிபத்திய கொள்கைகளுக்கு எதிராக கிளர்ந்து வருகின்றன.

## காலனியத்திலிருந்து நவீன காலனியத்திற்கு:

இரண்டாவது உலகப்போருக்கு பிந்தைய காலகட்டம் பல்வேறு மாற்றங்களுக்குசாட்சியம் அளிக்கிறது. யுத்தத்தை தொடர்ந்து, முன்னர் சோவியத் ஒன்றியம் மட்டுமே சோசலிச நாடாக நீடித்தது. சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் உலகின் மூன்றில் ஒரு பகுதி மக்கள் பின்னர் சோசலிசத்திற்கு மாறின. இன்னும் பல்வேறு நாடுகளில் குறிப்பாக காலனி, அரைக்காலனி நாடுகளில் சோசலிச இயக்கம் மிகவும் பலமாக உருவாகி எதிர்க்கப்பட முடியாததுபோல் காட்சியளித்தது. அதே சமயத்தில் ஏகாதிபத்திய முகாமின் தலைமையை எடுத்துக்கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியமானது உலக மேலாக்கத்திற்காக எழுந்தது. பழைய ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுடன் பழைய ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்கும் நெருக்கடி ஏற்பட்டு, காலனிய நாடுகளில் இருந்த முதலாளியத் தலைமைகளிடம் அதிகாரமானது கைமாற்றப்பட்டு நேரடி காலனிய ஆட்சியானது அநேகமாக முடிவுக்கு வந்தது. உண்மையில் இந்த மாறுதல்கள் நீண்டகாலமாகவே திரைக்கு பின்னர் பக்குவப்பட்டே வந்தன. இத்தகைய பொருளாதார - அரசியல் மாறுதல்கள் போர் கால சமயத்தில் விரைவுபடுத்தப்பட்டு இவற்றின் விளைவாக போருக்கு பின்னர் ஆதிக்கம் செலுத்துவதாகவும் அமைந்தது. பொதுவாக இத்தகைய மாறுதல்களை கீழ்வருமாறு பட்டியலிடலாம்.

ஏற்கெனவே சர்வதேசிய ஏகபோக நிறுவனங்கள் உருப்பெற்றிருந்தன. அவை பின்னர் பன்னாட்டு நிறுவனங்கள் (MNC) அல்லது நாடுகடந்த நிறுவனங்கள் (TNC) என்று அழைக்கப்பட்டன. இவை உற்பத்தியை மறுசீரமைப்பு செய்தன. உலக அளவில் திட்டமிட்ட வணிகத்தையும் செய்தன. இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகு உலக பொருளாதார ஆதிக்கத்திற்கான பெரும் தூண்களாக வெளிவந்தன. மூலதனம் சர்வதேசியமயமாவதை இது கூர்மைப்படுத்தி பல்வேறு பரிமாணங்களுக்கு இட்டுச்

சென்றது. ஜப்பான் மீது வீசப்பட்ட அணுகுண்டுகளுடன் துவங்கிய அணுகுண்டு மேல் ஆதிக்கமும், இத்துடன் வளர்க்கப்பட்ட அணுவியல் தொழில் நுட்பமும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையும், யுத்த முயற்சிகளும், நவீன யுத்தகருவிகளின் தோற்றமும், தகவல் தொடர்பு தொழில் நுட்பமும் விண்வெளி தொழில் நுட்பமும், இவற்றுக்கு ஒத்த இராணுவ தந்திரங்களும், இராணுவ அரங்கில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாண்மையை தக்க வைத்தன. இவற்றினால் மேம்படுத்திக் கொண்டதுடன் பல்வேறு பொருளாதார, அரசியல், இராணுவ உடன்படிக்கைகளும், கூட்டணிகளும், யுத்ததந்திர இராணுவ தளங்களும் உலகெங்கும் பரவத் தொடங்கின. பிரெட்டன்வுட் உடன்படிக்கையும் உலகவங்கி, ஐ.எம்.எப் போன்ற உலக நிதி நிறுவனங்களும் இவற்றின் ஒரு பகுதியாக முன்னெடுக்கப் பட்டன. அரசியல் - பொருளாதார நிறுவனங்களான காட் - உலக வர்த்தக நிறுவனம் போன்றவையும் இவற்றின் பல்வேறு தொங்கு சதைகளும் கூட முன்னெடுக்கப்பட்டன.

இத்தகைய அரசியல், பொருளாதார,இராணுவ, பின்னணியில் ஏற்பட்ட மாற்றங்கள் தான் ஏகாதிபத்தியமுறை பயனடைய உதவியது. உலகம் முழுவதிலும் இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகு ஏகாதிபத்திய சக்திகள் நவகாலனிய ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் இது வழி வகுத்தது. இதனால் தொலை தூர காலனிகளும் அரைக் காலனிகளும் கூட காலனிய நீக்கம் அடைந்தன. இத்தகைய புதிய பொருளாதார, இராணுவ மற்றும் அரசியல் ஒழுங்கமைப்பை முன்னேடுத்ததுடன் தலைமையையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் கைப்பற்றி பலனடைந்தது. இந்த பலனை பெறுவதற்கான கூறுகளில் ஒன்றாக இருந்தது தொழில் நுட்பமாகும். இந்த நூற்றாண்டின் தொடக்கம் முதற் கொண்டு இயற்பியல் தேற்றம், கதிரியக்க ஆற்றல், அலைவீச்சு இயல், பொதுவான விஞ்ஞானங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட விஞ்ஞான பலன்களை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அது பயன்படுத்தியதும் அதன் வலிமைக்கு அடிப்படையாக அமைந்தது. இந்த நூற்றாண்டின் தொடக்கம் முதற்கொண்டு பெட்ரோலிய சக்தி துறையில் அது பெற்றிருந்த ஆதிக்கத்தினால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் கடந்து சென்று முதன்மையான வலிமை பெற முடிந்தது. இவற்றுடன் கூட லத்தீன் அமெரிக்க நாடுகளில் அது மறைமுக ஆதிக்கம் செலுத்தி பெற்ற அனுபவங்களும் இருந்தன. இந்த நூற்றாண்டு தொடக்கம் முதல் பெட்ரோலிய துறையில் ஏகபோகங்கள் ஆரம்பித்ததானது அமெரிக்க பொருளாதார வாழ்வில் வலிமை பெற காரணமாக இருந்தது. இந்த நூற்றாண்டின் தொடக்க நாட்களில் காலனிகள் இதர ஏகாதிபத்திய சக்திகளின் முழுகட்டுப்பாட்டில் இருந்தன. பிரிட்டிஷ் கையாண்ட பாதுகாப்புவாதம் போன்ற கொள்கைகளை எதிர்த்து அமெரிக்க ஏகாதிபத்தியம் குரல் எழுப்பியதும் அதன் வலிமைக்கு துணையாக இருந்தது.மேலே கண்ட விசயங்கள் ஏற்கெனவே நிலவியவற்றிற்கு மாற்றியாக ஒவ்வொன்றாக முன்வைக்கப்பட்டதானது, இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகான நிலைமைகளில் காலனியக் கொள்ளையில் மாறுதல்களை ஏற்படுத்தியது பூகோள கைப்பற்றுதல்களைக் கடந்தும் உலகைப்பிரித்துக்கொள்வதில் ஏகாதிபத்திய சக்திகளுக்கு இந்த நிலையானது புதிய பரிமாணங்களை அளித்தது.

இந்த கால கட்டத்தில் ஏகாதிபத்திய கொள்ளையானது புதியதொரு இடைக்கட்டத்திற்கு மாறிச் சென்றதைப்பற்றிய ஒரு ஒருங்கிணைந்த ஆய்வு இல்லாததும் இதை ஒட்டி உலகப்பாட்டாளி வர்க்க பார்வையானது வளர்க்கப்படாததும், ஏகாதிபத்தியம் குறித்த பல்வேறு பகுதியானதும் ஒருதலைப்பட்சமானதுமான கோட்பாடுகளை தோன்றச் செய்தது. பிரிட்டன் உட்பட்ட காலனிய சக்திகளின் பலவீனத்தை குறைத்து மதிப்பிட்டதும் காலனிய நீக்க வளர்ச்சியினால் உண்டான நவீன

காலனியானது ஏகாதிபத்தியத்தின் பலவீனம் காரணம் என்ற விளக்கமும் நவீன காலனியமானது ஏகாதிபத்தியத்தின் பொருளாதார வடிவம் மட்டுமே என்பதும் அத்தகைய கோட்பாடுகளால் விளைந்த தாக்கமாகும். பிரிட்டன் மற்றும் இதர காலனிய சக்திகள் காலனிகளில் இருந்து வெளியேறியதானது தேசிய சுதந்திரம் பெற்றதாக விளக்கம் அளிக்கப்பட்டது. ஸ்டாலினாலும் கோமின்ஃபாமாலும் (Cominform) மறுக்கப்பட்ட இத்தகைய விளக்கங்கள் பின்னர் 1950-களில் திரிபு வாதத்திற்கான கோட்பாட்டு அடிப்படையாக இருந்தன. எத்தகைய தவறான புரிதலுக்கும் இடம் கொடுக்காமல் இத்தகைய ''காலனி வடிவம்'' குறித்து லெனின் தனது ஏகாதிபத்தியம் குறித்த ஆய்விலும் கூறியுள்ளார்.

முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய சகாப்தத்தின் காலனியாதிக்க கொள்கையை பற்றி நாம் பேசிக்கொண்டிருப்பதால் நிதி மூலதனமும் இதன் அயல்நாட்டு கொள்கையும் அரசு சார்பு நிலையின் பல இடைநிலை வடிவங்களை தோற்றுவிக்கின்றன என்பதை குறிப்பிட வேண்டும். காலனி உடமை நாடுகள் என்றும் காலனிகள் என்றும் நாடுகளுக்கிடையிலான இரண்டு பிரதான தொகுதிகள் மட்டுமின்றி, அரசியல் துறையில் பெயரளவில் சுதந்திரமானவையே என்றாலும் உண்மையில் நிதித்துறை, அரசுதந்திரதுறை சார்புநிலை என்ற வலைப்பின்னலால் கட்டுண்டிருக்கும் சார்பு நாடுகளின் பல்வேறு வடிவங்களும் இச் சகாப்தத்திற் குரிய இன மாதிரியானவை ஆகும். சார்பு நிலையின் ஒரு வடிவமாகிய அரைக் காலனியை ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். ஆர்ஜென்டினா மற்றொரு உதாரணத்தை அளிக்கிறது. ( லெனின் தேர்ந் தெடுக்கப்பட்ட தொகுப்பு 1, பக்கம் 734) தென் அமெரிக்கா முழுமைக்கும் இது பொருந்தக் கூடியதுதான் என்று லெனின் மேற்கண்ட மதிப்பீட்டை செய்ததன் மூலம் தெளிவு படுத்தியிருக்கிறார்.

இரண்டு விஷயங்கள் காலனிய நீக்க மாற்றத்தை விரைவு படுத்தின ஒரு புறம் பிரிட்டனுக்கு ஏற்கனெவே இருந்த கடல் மண்டலங்களில் இருந்த ஆதிக்கத்தை அணு மற்றும் வானவியல் துறைகளில் பெற்ற ஆதிக்கத்தைக் கொண்டு அமெரிக்கா கடந்து சென்றது; மூலதனத்தின் கட்டமைப்பை உலகளாவிய வளர்ச்சிக்கு அழைத்துச் சென்றது. சோவியத் யூனியனை சுற்றி வளைப்பதற்காக மேற்கு ஐரோப்பா மற்றும் ஜப்பானுடன் அமெரிக்கா செய்து கொண்ட ஒப்பந்தங்கள் மற்றும் கண்டங்களுக்கு இடையில் பெற்றிருந்த அதன் ஏராளமான இராணுவ தளங்கள்; மேலும் ஏற்கெனவே காலனிய நீக்கம் செய்யப்பட்ட நாடுகளில் அவற்றின் பிற்போக்கு ஆட்சிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள்; இவை போன்ற அனைத்து சாதகமான கூறுகளும் காலனிய நீக்கத்தை விரைவுபடுத்துவதற்கான பின்னணியை உருவாக்கின. மறுபுறம், காலனிகளில் முதலாளியத் தலைமையின் கீழ் சுயாட்சி முழக்கங்களின் அடிப்படையில் எழுந்த இயக்கங்களின் முன்னேற்றங்கள்; மேலும் இத்தகைய நாடுகளில் மூன்றாவது அகிலத்தின் தலைமையின் கீழ் வளர்ந்த ஒன்றுபட்ட நடவடிக்கைகள் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் சுயேட்சையான நடவடிக்கைகளால் எழுந்த அச்சுறுத்தல்களால் உருவான சாதகமற்ற சூழல்கள் போன்றவையும் கூட காலனிய நீக்கத்தை விரைவு படுத்தின . வரலாற்றின் இத்தகைய அம்சங்களை மறுதளிக்கும் பல்வேறு வலிமையான போக்குகள் இன்றும் கூட பரவலாக நீடித்திருப்பதால், விசேசமாக இந்த விஷயங்களை சுட்டிக்காட்டவேண்டியது அவசியமானதாகி விடுகிறது. இத்துடன் உலகஅளவில் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளில் இந்த காலகட்டத்தில் நிலவிய வலிமையான சோசலிச முகாமின் தாக்கம் வேறு இருந்தது. இந்த

காலகட்டத்தில் சோவியத் யூனியனின் அனுபவத்தை முதலாளித்துவம் பரிசோதனை அடிப்படையில் மேற்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டு அவர்கள் அவர்களது சொந்த கட்டுப்பாட்டின் கீழ் கெய்னீசியன் பொருளாதார வடிவத்தை ஏற்றுக்கொண்டார்கள். சுதந்திர மூலதனத்தின் நெருக்கடி வளர்ச்சியை உணர்ந்து, ஒவ்வொன்றையும் சந்தையின் மேலாதிக்கத்திற்கு விட்டு விடாமல் ஒரு சில துறைகளிலாவது திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளை அரசுக் கட்டுபாட்டின் கீழ் கொண்டு வர பூர்சுவா பொருளாதாரமானது பகுதி அளவிலாவது தன் மேலாண்மையில் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்த நிலையானது, ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளில் ஒரு புறம் இராட்சச இராணுவ பொருளாதார வளர்ச்சிக்கும் மறுபுறம் பல்வேறு சமுகநல திட்ட நடவடிக்கைகளுக்கும் இட்டுச் சென்றது. தேசிய மயமாக்கத்தின் விரிவுக்கும் அரசை முதலாளித்துவ வடிவங்களுக்கும் கூட இந்நிலைமை இட்டுச் சென்றது. இத்தகைய பகுதியளவிலான பரிசோதனைகள் அனைத்தும் அறுபதுகளுக்கு பிறகான அனுபவங்கள் உணர்த்துவது போல் ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியானது ஆழத்திலும் அகலத்திலும் கூர்மையடைந்திருப்பதை மட்டுமே நிருபிக்கிறது.

'ஏகாதிபத்தியம் முதலாளியத்தின் உச்சகட்டம்' என்ற நூலின் பிரெஞ்சு ஜெர்மன் பதிப்புகளுக்கான முன்னுரையில் லெனின் எழுதினார் : "சிறு உடைமையாளனின் உழைப்பை அடிப்படையாக கொண்ட தனியார் சொத்து, சுதந்திர போட்டி, ஜனநாயகம் போன்ற கவர்ச்சிகரமான வார்த்தைகளினால் தொழிலாளிகளையும், விவசாயிகளையும் முதலாளியும் அதன் ஏவலாட்களும் ஏமாற்ற முடிந்ததானது கடந்த காலத்தின் விஷயமாகிவிட்டது. உலகின் மிகப் பெரும் பகுதி மக்களை ஒரு சில "முன்னேறிய நாடுகள்" காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கும் நிதித்துறை நசுக்கலுக்கும் உள்ளாக்கும் உலக அமைப்பாக முதலாளியம் வளர்ந்துவிட்டது. மேலும் இந்த "கொள்ளையை அங்கம் அனைத்தும் ஆயுதம் தரித்த வலுமிக்க இரண்டு அல்லது மூன்று உலகக் கொள்ளைக்காரர்கள் ( அமெரிக்கா, கிரேட்பிரிட்டன், ஜப்பான்) தமக்கிடையே பங்கிட்டுக் கொள்கிறார்கள்: இவர்கள் தமது கொள்ளையை பாகப்பிரிவினை செய்து கொள்வதற்காக நடத்தும் தமது யுத்தத்திற்கு அனைத்து உலகையும் இழுத்து விடுகிறார்கள்" (லெனின், தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்பு - பக்கம் 178)

காவுத்ஸ்கியின் "அதீத ஏகாதிபத்தியம்" போன்ற வரையறுப்புகளை ஏகாதிபத்தியத்தின் உண்மையான வர்க்க உள்ளடக்கத்தை மூடிமறைக்கும் செயல் என்று லெனின் விமர்சித்தார். மேலும் காவுத்ஸ்கியின் ஏகாதிபத்தியம் பற்றிய அரசியல் மற்றும் பொருளாதார விமர்சனங்களானது மார்க்சியத்துடன் முழுமையாக ஒத்துபோகாத ஒரு பேயை கடத்திக் கொண்டு வந்திருப்பது எனவும், ஏகாதிபத்தியத்தின் அடிப்படை முரண்பாடுகளை மூடிமறைப்பதும் இருட்டடிப்பு செய்வது எனவும், ஐரோப்பிய தொழிலாளி வர்க்க இயக்கத்தில் நிலவிய சந்தர்ப்பவாதத்துடன் தகர்ந்து வந்த ஒற்றுமையை எப்பாடுபட்டாகிலும் பாதுகாக்கும் முயற்சி எனவும் லெனின் விளக்கமளித்தார்.

காவுத்ஸ்கி போன்ற சந்தர்ப்பவாதிகளை அம்பலப்படுத்தும் போக்கில் லெனின் ஏகாதிபத்தியத்தின் ஐந்து அடிப்படை அம்சங்கள் குறித்து கீழ்வருமாறு விளக்கினார் : - 1. பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான இடத்தை வகிக்க கூடிய ஏகபோகங்களை உருவாக்கும் வகையில் மூலதனம் மற்றும் உற்பத்தியானது மையப்படுத்தப்பட்டு வளர்ச்சி அடைந்து ஒரு உச்ச கட்டத்தை அடைதல். 2. வங்கி மூலதனமும் தொழில்

மூலதனமும் இணைந்து ''நிதி மூலதன '' அடிப்படையில் ஒரு நிதி ஆதிக்க கும்பல் உருவாதல். 3. சரக்குகள் ஏற்றுமதிக்கு பதிலாக மூலதன ஏற்றுமதியானது சிறப்பான முக்கியத்துவம் பெறுதல். 4. உலகை தமக்குள் பங்கிட்டு கொள்வதற்காக சர்வதேச ஏகபோக முதலாளிய கூட்டுகள் தோன்றுதல். 5. மேலும் , மிக பெரும் முதலாளிய சக்திகளுக்கு இடையில் அனைத்துலகமும் பிரதேச வாரியாக பங்கிடப்படுவது முடிவடைதல். (லெனின், அதே நூல், பக்கம் 232.)

முதலாளியமானது அதன் உச்ச கட்டமான ஏகாதிபத்தியத்திற்கு மாறி சென்றதானது காலனிகளின் தொடர்ச்சியான அதிரடி கைப்பற்றல் முயற்சிகளுடன் உள்ளார்ந்து இணைந்து இருந்ததென லெனின் விளக்கினார். உலகின் பிரதேசங்களை பங்கீடு செய்வதற்கான போராட்டமானது முன் பின் காணாத வகையில் கூர்மை அடைந்தது. அதாவது, ஏகாதிபத்தியம் உருவான இந்த காலத்தில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் இந்த இடைக்கட்டத்தில் தமது கட்டுப்பாட்டின் கீழ் நேரடி ஆட்சியை கொண்டு வருவதுடனும், உலக பிரதேசங்களை மறுபங்கீடு செய்யவுமான போராட்டம் கூர்மையடைவதுடனும் தொடர்புடையதாக இருந்தது. லெனின் கூறினார்:- ''மென்மேலும் முதலாளியம் வலிமையாக வளர்வதற்காக மூலப் பொருட்களின் பற்றாக்குறை உணரப்பட்ட போது, உலகப் பூராவிலும் உள்ள மூலப்பொருட்களின் மூலாதாரத்திற்கான வேட்டையும் போட்டியும் கூர்மை அடைந்தது ; எனவே, காலனிகளை சொந்தமாக்குவதற்கான போராட்டமும் தீவிரம் அடைந்தது.'' லெனின் மேலும் கூறினார் :- ''போட்டிகளுக்கு எதிரான போராட்டத்தின் நிகழ்வு போக்குகளுக்கு மாறாக காலனிகளை உடமையாக்குவது மட்டுமே ஏகபோகங்களுக்கு முழுமையான உத்திரவாதத்தை தரும்''. (அதே நூல், பக்கம், 228)

இந்த காலனிய இடைக்கட்டத்தின் போது *சீனாவின்* விஷயம் குறித்து மாவோ விளக்கியதாவது :- ''நிலப்பிரபுத்துவ *சீனாவை* முதலாளிய *சீனாவாக* மாற்றுவது என்பது *சீனாவில்* ஊடுருவிய ஏகாதிபத்திய சக்திகளின் நோக்கமாக நிச்சயமாக இல்லை. இதற்கு மாறாக, *சீனாவை* தங்களுடைய சொந்த அரைக்காலனியாகவோ அல்லது காலனியாகவோ மாற்றுவதுதான் அவர்களது நோக்கமாக இருந்தது.'' (மாவோ, *சீன* புரட்சியும் *சீன* கம்யூனிஸ்ட் கட்சியும்)

லெனின் அவருடைய நூல்களில் திரும்ப திரும்ப அரைக்காலனி என்பது மாறுநிலை வடிவத்திற்கான உதாரணம் என்பதை சுட்டிக் காட்டி உள்ளார். காலனிகள் தான் முழுமையான சுரண்டலுக்கும், மூலப்பொருட்கள் பெறுவதற்கும் மிகவும் சாதகமான ஏற்பாடு ஆகும். ''அரைக்காலனிய நாடுகள் மத்திய கட்டத்திற்கு ஒரு வகை மாதிரியான உதாரணமாக இருப்பதால்'' ஏகாதிபத்தியவாதிகள் அவற்றை காலனிகளாக்குவதற்கு எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் முயலுகின்றனர். *சீனாவின்* விஷயத்தில் இத்தகைய வளர்ச்சிப் போக்கை மாவோ தெளிவுபட விளக்கியுள்ளார்.

ஏற்கெனவே நாம் முன்னர் விளக்கியவாறு, இரண்டாவது உலக போருக்கு பிறகான ஆண்டுகளில் ஏகாதிபத்திய நாடுகள் காலனிய நீக்க கொள்கையை மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அமெரிக்க ஏகாதிபத்திய தலைமையின் கீழ் நவீன காலனியம் என்ற ஒரு இடைக்கட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. 1944-ல் உருவான பிரெட்டன் வுட் ஒப்பந்தமானது ஏகாதிபத்திய மூலதனத்தின் ஆதிக்கத்தை திணிக்க ஏராளமான புதிய நிறுவனங்களை உருவாக்கியது.

நவீன காலனியம் பற்றிய புரிதலை மேம்படுத்திக்கொள்ள இன்னும் கூட ஆய்வுகளும், வளர்ச்சியும் தேவைபட்டாலும் அதன் அடிப்படைக்கூறுகள் பற்றி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தனது மாபெரும் விவாதம் ஆவணங்களில் தொகுத்தளித்துள்ளது. அது குருச்சேவிய திரிபுவாதிகளை ஏகாதிபத்திய முகாமின் துணைவர்களாக வரையறுத்ததுடன், அவர்களை "நவீன காலனியத்தின் தாசர்கள்" என்றும் அழைத்தது. ஆனால், தம்மை மார்க்சிய - லெனினிய வாதிகள் என்று அழைத்துக்கொள்ளும் பல்வேறு அமைப்புகள் மேலே கண்ட அதே தாசர்களின் விளக்கத்தையே நவீன காலனியத்திற்கு அளித்து மாபெரும் தவறு செய்து வருகிறார்கள். அவர்கள் நவீன காலனிகள் என்றால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளால் ஆளப்படும் வடிவம் தான் என்றும் கையளவிலான நாடுகள்தான் நவீன காலனியத்திற்கு ஆட்பட்டுள்ளன என்றும் கூறுகிறார்கள். மற்றவர்களோ தமக்குள் இவற்றை அரைக்காலனிகள் என்று அழைக்கிறார்கள். நாம் ஏற்கனவே லெனின் மற்றும் மாவோவிடம் இருந்து எடுத்து உரைத்தவாறு காலனிய இடைக்கட்டத்தின் போது அரைக்காலனியானது மத்திம அல்லது மாறு நிலைக்கட்டத்தில் உள்ள ஒரு நாடாகும். சீனா போன்ற இத்தகைய அரைக்காலனி நாடுகளின் சில பகுதிகள் கூட நேரடி ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தவையாகும். ஏகாதிபத்திய மூலதனத்தின் கொள்ளையின் கீழும், சர்வதேச நிறுவனங்கள் அல்லது ஏகாதிபத்தியத்தின் புதிய வடிவங்களின் கீழும் உள்ள இன்றைய ஆசிய - ஆப்பிரிக்க - லத்தீன் அமெரிக்க நாடுகள் முன்னர் இருந்த அரைக்காலனிகளை விட வேறுபாடானவை ஆகும்.

முன்னர், காலனிய இடைக்கட்டத்தில் இருந்த காலனிகள், அரைக் காலனிகள் விஷயத்திலாகட்டும், இன்றைய நவீன காலனிய இடைக்கட்டத்தில் உள்ள நவீனகாலனிகள் விஷயத்திலாகட்டும் புதிய ஜனநாயக புரட்சியின் அடிப்படைக் கூறுகள் அப்படியேதான் உள்ளன. புதிய ஜனநாயக புரட்சியானது ஏகாதிபத்தியம், தரகு முதலாளியம், அதிகாரவர்க்க முதலாளியம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றின் ஆட்சியை தூக்கி எறிவதன் மூலம் மட்டுமே வெற்றி அடைய முடியும். மேலும் தொழிலாளி - விவசாயி கூட்டணியை அதன் அடிப்படையாகக் கொண்டு தொழிலாளி வர்க்க தலைமையின் கீழ் புதிய ஜனநாயக அரசு கட்டப்பட வேண்டும்.

### *மாபெரும் விவாதம்:*
### *நவீன காலனியம் குறித்த இரு அணுகுமுறைகள்*

உலக சோசலிச இயக்கத்திற்கு உதவிடும் வகையிலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை வேகப்படுத்தும் விதத்திலும், இரண்டாவது உலக போருக்கு பிறகான சூழலை சரியாக மதிப்பிடாதது மட்டுமல்ல ; இக்காலக்கட்டத்தின் வளர்ச்சிகளைப் பற்றி தவறான முடிவுகளுக்கும் வந்ததானது உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஆதிக்கம் வகித்து தொடர்ச்சியாக புரட்சியின் அகநிலை சக்திகளைப் பலவீனப்படுத்தியது. இந்த காலகட்டத்தில்தான் குருச்சேவிய திரிபுவாதமானது ஏகாதிபத்திய வலிமையை குறைத்தும் சோசலிச சக்திகளின் வலிமையை மிகைப்படுத்தியும் மதிப்பீடு செய்தது. சோசலிசமானது ஆதிக்கமும், தீர்மானகரமான வலிமையும் பெற்றுள்ள புதிய சூழலில் வர்க்க போராட்டமானது சமாதான சகவாழ்வாக மாற்றப்பட முடியும் என்றும் சோசலிச நாடுகளின் குறிப்பாக சோவியத் யூனியனின் உதவியுடன் உலகம் பூராவும் சோசலிசத்திற்கு அமைதி வழி மாற்றம் சாத்தியம் என்றும் அது முடிவுகளுக்கு வந்தது. சோசலிசம் ஆதிக்கம் வகிக்கும் புதிய சூழலில் "இதன் பின்னர்" சோசலிச நாடுகளில் முதலாளியமீட்சி சாத்தியமில்லை என்றும் அது

தீர்ப்பளித்தது. இந்த புதிய சூழலில் காலனிய நீக்கம் பெற்ற நாடுகளில் இருந்த முதலாளிகள் தேசிய விடுதலையை தலைமை தாங்கி செல்லும் சக்திகள் மட்டுமல்ல, ஆனால் இந்த வர்க்கம் சோவியத் யூனியனுடன் ஒத்துழைத்துக் கொண்டு தமது நாடுகளை சோசலிசத்திற்கும் அழைத்துச்செல்லும் தகுதியும் உடையவை என்று கூட குருச்சேவிய திரிபுவாதம் மதிப்பீடு செய்தது. அது காலனிய நீக்க வளர்ச்சியை தேசிய சுதந்திரம் அடைந்ததாக விளக்கியதுடன் அமெரிக்க ஏகாதிபத்திய தலைமையின் கீழ் வெளிவந்த நவீன காலனிய அபாய அச்சுறுத்தலையும் அநேகமாக மறுதலித்தது. சோவியத் ஆய்வுகளும் புத்தகங்களும் நவீன காலனியத்தை ஏகாதிபத்தியத்தின் பலவீனமான வடிவமாகவே பார்த்தன. உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்த முயற்சித்த இந்த நவீன திரிபுவாதத்தை எதிர்த்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சியும் 1960 களில் மூன்றாவது அகிலத்தின் பாதையை உயர்த்தி பிடித்து மாபெரும் விவாதம் நடத்தினர்.

1963 - ல் வெளியான பொதுவழி பற்றிய ஆவணமானது குருச்சேவியவாதிகளை ''நவீன காலனிய தாசர்கள்'' என்று அழைத்தது. ''சோவியத் கம்யூனிஸ்ட் தலைவர்கள் தற்காலிக உலகில் இருந்து காலனியம் மறைந்து விட்டது என்ற கருத்தை அடிக்கடி பரப்பி வருகின்றனர்'' என்று கூறிய பிறகு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்படி ஆவணமானது பின்வருமாறு கூறுகிறது: ''உண்மைகள் தெளிவாகஇருக்கின்றன இரண்டாம் உலகப்போருக்கு பின் ஏகாதிபத்தியவாதிகள், காலனியாதிக்கத்தை கைவிடவில்லை. நவீன காலனியம் என்ற வடிவத்தை மட்டுமே புதிதாக மேற்கொண்டிருக்கிறார்கள். ஏகாதிபத்தியவாதிகள் தங்களது பழைய முறையான நேரடி காலனிய ஆட்சி முறையை கைவிடுமாறும், தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்ட ஏஜெண்டுகள் மூலம் ஒரு புதியவகை காலனியாட்சியையும் சுரண்டலையும் மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது நவீன காலனியாதிக்கத்தின் ஒரு முக்கிய குணாம்சமாகும். அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள் இராணுவ முகாம்களை உருவாக்கியும்இராணுவ தளங்களை அமைத்தும், கூட்டமைப்புகள், பொருளாதார சமூகங்கள் ஆகியவற்றை நிறுவியும் பொம்மை ஆட்சிமுறைகளை வளர்த்துவிட்டும் காலனி நாடுகளையும், ஏற்கனவே பிரகடனம் செய்த சுதந்திர நாடுகளையும் அடிமைப்படுத்துகிறார்கள் அல்லது கட்டுப்படுத்துகிறார்கள். மேலும் அதிகமாக இந்நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதற்கும் இந்நாடுகளில் இராணுவ பொருளாதார, கலாச்சார ஆக்கிரமிப்பு தொடுப்பதற்கும் ஐ. நா. சபையை ஒரு கருவியாக ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்துகின்றனர்.'' மீண்டும் அடுத்த பாராவிற்கு பின் அந்த ஆவணம் குறிப்பிடுகிறது. ''இந்த நவீன காலனியம் என்பது மிக மிக அபாயகரமானதும் கொடூரமானதுமான காலனிய வடிவம் ஆகும் ''. ( மாபெரும் விவாதம். பக்கம் 390)

மூன்றாவது அகிலம் மற்றும் லெனினது போதனைகளின் தொடர்ச்சியாக உருவான இத்தகைய விஞ்ஞான மதிப்பீட்டுக்கு மாறாக மாவோ மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரால் பிரச்சாரம் செய்யப்பட்ட சில சீர்குலைவு கோட்பாடுகள் இன்னும் கூட நீடிக்கின்றன. அதாவது நவீன காலனியம் என்பது ஒரு ஏகாதிபத்திய சக்தியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகும் என்பதும் பிற அரைக்காலனி நாடுகள் என்பதும் அத்தகைய கோட்பாடுகளில் ஒன்றாகும். சீனாவையும், துருக்கியையும் அரைக்காலனிகளுக்கு உதாரணங்களாக எடுத்துக்கொண்ட லெனின் ஏகாதிபத்தியம் குறித்த தன் ஆய்வில் எழுதினார்:- ''அரைக்காலனிய அரசுகளைப் பொறுத்தவரை இயற்கை மற்றும் சமுதாயத்தின் எல்லாத்துறைகளிலும் காணக்கூடிய

இடைநிலை வடிவங்களுக்கு அவை ஓர் உதாரணமாகும்..... இந்த விதத்தில், அரைக்காலனிநாடுகள் ''மத்திம கட்டத்துக்குச் '' சிறந்த வகை மாதிரியான உதாரணமாகும். எஞ்சிய உலகம் அனைத்தும் ஏற்கெனவே பங்கிடப்பட்டுவிட்ட நிதிமூலதனச் சகாப்தத்தில் இந்த அரைசார்பு நாடுகளுக்கான போராட்டம் குறிப்பிடத்தக்கவாறு உக்கிரம் அடைவது இயற்கையே.'' (லெனின், தொகுப்பு நூல் 1, பக்கம் 731)

ஏகாதிபத்தியத்தின் காலனிய இடைக்கட்டத்தின் சமயம் சில விதிவிலக்கான விஷயங்களாகவும், முழு காலனியத்தை நோக்கிய மாறுதல்களாகவும், மத்திம கட்டமாகவும் லெனின் பார்த்ததை, இன்றைய சில சீர்குலைவு கோட்பாட்டுவாதிகள் காலனிய நீக்க நாடுகளுக்கான குணாம்சங்களாக இன்றைய சூழலில் சித்தரிக்க முயலுகிறார்கள். சீன கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மாவோ காலத்தில் இருக்கும் ஆவணங்களில் இருந்தோ அல்லது அக்காலத்தில் இருந்த பொதுக் கருத்துகளில் இருந்தோ எத்தகைய நியாயப்படுத்தல்களையும் இதை ஒட்டி நாம் பெற இயலவில்லை. ஆனால், 1972 ஜனவரி 21-ல் வெளியான பீகிங் ரெவ்யூ என்ற இதழில் கொடுக்கப்பட்டிருந்த தலைப்பானது ''இந்தியாவில் சோவியத் நவீன திரிபு வாதம் நவீன காலனியவாதம்'' என்றே இருந்தது. அந்த காலக்கட்டத்தில் சோவியத் மூலதனத்துடன் அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பிற ஏகாதிபத்திய நாடுகளின் மூலதனங்களும் இருந்ததையும் அவற்றின் பாத்திரத்தையும் பீகிங் ரெவ்யூ புறக்கணித்துவிட்டதாக எவரும் குற்றம் சாற்றவில்லை.

## சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த விலகல் போக்குகள்

1957, 1960 மாஸ்கோ மாநாடுகளுக்கு பிறகும், மாபெரும் விவாதத்தை தொடர்ந்தும் உலகம் பூராவிலும் குருச்சேவிய திரிபுவாதத்திற்கு எதிராக போராடிய மார்க்சிய - லெனினிய சக்திகளுக்கிடையில் உருவான புதியவர்கள் இருக்கிறார்கள். சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நவீன திரிபுவாதத்தை எதிர்த்து மாவோ நடத்திய பண்பாட்டு புரட்சியானது மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. திட்டமிட்ட மற்றும் அமைப்புரீதியிலான சர்வதேசிய இயக்கம் இன்மையால், சீனாவிலும், சீன கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஏற்பட்ட மாற்றங்களை அப்படியே குருட்டுதனமாக பின்பற்றியதால் அனைத்து மார்க்சிய - லெனினிய சக்திகளையும் ஒருங்கிணைத்து வழிநடத்த முடியவில்லை. சீன கம்யூனிஸ்ட்டுகள் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஒரு புதிய எழுச்சியை ஏற்படுத்தி இருந்தாலும், இயக்கத்திற்குள் ஏற்பட்ட பல விலகல்களுக்கும் அவர்கள் காரணமாக இருந்துள்ளனர். அவர்களில் சிலர் மறைமுகமாக இருந்ததாலும், தவறிழைப்பவர்களாக இருந்ததாலும், நீண்ட காலத்திற்கு இயக்கத்தை பாதிப்படைய செய்ததானது அப்போது தெரியாமல் இருந்தது. பின்னர் இயக்கத்தில் இருந்த பல விலகல்களுக்கு அவர்கள் காரணம் என்று தெரிந்தது. அந்த சமயத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சி கூர்மையான கருத்தியல் போராட்டத்தில் நீண்ட காலம் இருந்து வந்தது. ஒரு சகோதர கட்சி என்ற நிலைபாட்டிலிருந்து பொறுப்புணர்வோடும், முதிர்ச்சியுடனும் இத்தகைய கருத்தியல் போராட்டங்களை ஆய்வு செய்யவோ, காணவோ இல்லை ; இவற்றை விஞ்ஞான பூர்வமாக அணுகவும் இல்லை ; ஆனால் இதற்கு மாறாக சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஒவ்வொரு சமயமும் ஆதிக்கம் செலுத்திய வேறு வேறு போக்குகளுக்கு கண்மூடித்தனமாக வழிபாடு செய்ததுதான் நாம் மேலே காணக்கூடிய பல்வேறு போக்குகளை வழிநடத்தியது.

சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் திரிபுக்கு எதிராகவும், சோசலிச நாடுகளில் முதலாளிய மீட்சிக்கு எதிராகவும் நடத்தப்பட வேண்டிய போராட்டத்தின்

முக்கியத்துவம் பற்றியதுதான் பண்பாட்டு புரட்சியின் ஆக்கப்பூர்வ பங்களிப்பு என்பது ஒரு உண்மையாகும். ஆனால் கலாச்சார புரட்சியின் போது 1969-ல் நடந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்பதாவது மாநாட்டில் லின்பியாவோவின் செல்வாக்கும் அவருடன் தொடர்புடைய தீவிர தவறுகளால் ஏற்பட்ட செல்வாக்கும் பிரதிபலிக்கக்கூடியதாக இருந்தது. இந்த மாநாட்டில்தான் கட்சி சட்டத்தில் மாவோவின் அரசியல் வாரிசு லின்பியாவோ என்பதை போன்ற கம்யூனிஸ்ட் விரோத பிரகடனங்கள் வெளியிடப்பட்டது. இம்மாநாட்டை தொடர்ந்து வெளிப்பட்ட ''மாவோவின் மேற்கோள்கள்'' மற்றும் மாவோ வழிபாடு போன்றவை தவறுகள் என்று மதிப்பிடப்பட்டு, லின்பியாவோ வெளியேற்றப்பட்டிருந்தார். இருந்தாலும் உலகம் முழுவதும் இத்தவறுகள் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தது. லின்பியாவோவால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இந்த போக்குதான் உலகத்தின் பார்வையாக அளிக்கப்பட்டது. உலக புரட்சியின் பார்வையாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட லின்பியாவோ போக்கானது மிகவும் எளிமைப்படுத்தப்பட்டதும், வீரத்தீரத்துடன் தொடர்பு உடையதும் ஆகும். இத்துடன் மக்கள் யுத்தத்துடன் தொடர்புடைய போர்தந்திரங்கள் பற்றிய பொருளை வீரதீரச்செயலுக்கானதாக குறுக்கிவிட்டதும் ஆகும். இவற்றுடன் ஏகாதிபத்தியம் மற்றும் இன்றைய சகாப்தம் குறித்த குருச்சேவிய நிலைபாடு இடது துணிச்சல்வாத புரட்சிகர வார்த்தைகளுடன் ஒன்பதாவது மாநாட்டில் மீண்டும் வெளிப்பட்டது. இது ஏகாதிபத்திய சகாப்தம் பற்றிய லெனினின் வரையறுப்பை மறுத்ததோடு, இன்றைய சகாப்தத்தை ''ஏகாதிபத்தியம் முழு அழிவை நோக்கி சென்றுக்கொண்டிருக்கிறது மற்றும் சோசலிசம் உலகம் தழுவிய வெற்றியை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறது'' என்று முன்வைத்தது. சித்தாந்த முதிர்ச்சியை இன்னும் அடையாத, புதிதாக உருவான மா.லெ. கட்சிகளுக்கு இடையில் இத்தகைய மதிப்பீடுகள் மாபெரும் தாக்கத்தை உருவாக்கின. உதாரணத்திற்கு இ.க.க. (மா.லெ.) 70 திட்டம் கூறியதாவது :- ''மாசேதுங் சிந்தனையானது ஏகாதிபத்தியம் முழுதகர்வை நோக்கி செல்லுவதும் சோசலிசம் உலகளாவிய முழு வெற்றியை நோக்கி செல்லுவதும் ஆன நமது சகாப்தத்தின் மார்க்சியம் - லெனினியம் ஆகும்'' பாட்டாளி வர்க்க புரட்சியின் நீடித்த ஒரு மார்க்சிய - லெனினிய வழியை வளர்த்தெடுக்க உதவுவதற்கு மாறாக இத்தகைய மதிப்பீடுகள் உடனடி மாற்றம் மற்றும் எளிமையான வரைப்படத்தைத்தான் உருவாக்கின. சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கம் தீவிர பின்னடைவுகள் அடைவதற்கான காரணங்களாகத்தான் இவை இருந்தன. இன்னும் நீடித்து இருக்கும் இந்த தவறான வழியின் மிச்ச சொச்சங்களின் தொடர்ச்சியானது இன்றும் பின்னடைவுகளுக்கான காரணங்களாக உள்ளன.

ஒன்பதாவது மாநாட்டில் முன்வைக்கப்பட்ட இச்சகாப்தம் குறித்த கருத்தாக்கத்தை சீன கம்யூனிஸ்ட் கட்சியானது மாற்றிக்கொண்டது. பின்னர் சகாப்தம் குறித்த லெனினிய புரிதலை மீண்டும் இணைத்தும் கொண்டது. 1973-ல் சூ.என்.லாய். முன்வைத்த பத்தாவது காங்கிரஸ் அறிக்கையானது ''இன்றைய சூழலும் நமது கடமைகளும்'' என்ற தலைப்பில் கூறியது கீழ்வருமாறு உள்ளது. '' மாவோ நமக்கு அடிக்கடி போதித்திருப்பதாவது நாம் இன்னும் ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளிவர்க்க புரட்சியின் சகாப்தத்தில் தான் இருக்கிறோம் என்பதாகும்''. இதனை தொடர்ந்து, ஏகாதிபத்தியம் குறித்த லெனினுடைய ஆய்வை விளக்கும் இந்த பத்தியில் கூறப்படும் முடிவானது வருமாறு உள்ளது. ''ஸ்டாலினும் கூட லெனினியம் தான் ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்க புரட்சி சகாப்தத்தின் மார்க்சியம்'' என்று கூறினார். இது மிகவும் சரியானதாகும். லெனினுடைய மறைவுக்குப்பின்னர் உலக நிலைமை

மிகப்பெரும் மாறுதல்களை அடைந்துள்ளது. ஆனால் சகாப்தம் மாறவில்லை. லெனினியத்தின் அடிப்படை கோட்பாடுகள் காலாவதியாகவில்லை. இன்றும் நமது சிந்தனைக்கு வழிக்காட்டும் தத்துவ அடிப்படையாக அவைதான் உள்ளன. பின்னர் இந்த விஷயம் தொடர்ச்சியாக வற்புறுத்தப்பட்டது. ''திரிபு வாதத்திற்கு எதிரான போராட்டத்தில் வன்மையான கருத்தியல் ஆயுதம்'' என்ற தலைப்பிலான கட்டுரை லின்பியாவோவிற்கு எதிரான சித்தாந்த போராட்டமாக வெளியானது. ''ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்'' என்ற லெனினின் ஆய்வின் மீதும் கூட பல கட்டுரைகள் வெளியிடப்பட்டன. லின்பியாவோவிற்கு எதிரான போராட்டத்தில் இவற்றை மீண்டும் மீண்டும் கற்கும் அவசியம் வற்புறுத்தப்பட்டது''. பத்தாவது காங்கிரஸ் அறிக்கையின் இத்தகைய கூற்றுகள் தவிர, ஒன்பதாவது காங்கிரஸில் மேற்கொள்ளப்பட்ட தீவிர தவறுகள் குறித்த மதிப்பீடுகள், ஆவணங்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சியிடம் இருந்து வெளியுலகிற்கு கிடைக்கவில்லை. பத்தாவது காங்கிரஸில் அழுத்தம் தரப்பட்ட நிலைபாடுகள் மற்றும் பிற்கால ஆவணங்கள் அக்கறைக்குறியவையாக இல்லாமல் போய்விட்டது கூட இதன் காரணமாக இருக்கலாம். இதன்விளைவாக சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் லின்பியாவோ அறிக்கை உருவாக்கிய எதிர்மறை செல்வாக்கானது மிகப்பெரும் அளவுக்கு இன்றும் நீடிக்கிறது.

10வது காங்கிரஸ் அறிக்கையில் கூறப்பட்டிருந்த லெனின் இறப்புக்கு பின்னர் உலக நிலைமையானது ''மகத்தான மாறுதல்களுக்கு'' உள்ளாகியிருக்கிறது என்பதானது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் 10வது காங்கிரசுக்கு பின்னால் உள்ள ஆண்டுகளில் போதுமான அளவு கற்கப்படவேண்டியதில் முன்னெடுத்துச் செல்லப்பட வில்லை. அல்லது, அறுபதுகளில் மாபெரும் விவாதத்தில் குருச்சேவ் திரிபுவாதத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட நவீன காலனியம் குறித்த அரசியல் நிலைபாட்டில் உள்ள தத்துவ, பொருளாதார மதிப்பீடுகள் வளர்க்கப்படவும் இல்லை. லின்பியாவோவிற்கு எதிரான போராட்டத்தின் பகுதியாக முன்வைக்கப்பட்ட லெனினது ஏகாதிபத்தியம் குறித்த நிலைபாடுகள் உள்ள கட்டுரைகள் கூட எளிமைப்படுத்தப்பட்ட அளவில் லெனினை ஒப்பிட்டு காட்டுவதாக மட்டுமே இருந்தது. அதேசமயம் 'மகத்தான மாறுதல்கள்' குறித்த மதிப்பீடோ அவற்றில் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

சோவியத் திரிபுவாதத்தை எதிர்த்து போராடுவது என்ற பெயரில் வெளிவந்த ஏராளமான குட்டிமுதலாளிய, புதிய இட்து போக்குகளை எதிர்க்க கூட தீவிர முயற்சிகள் அந்த கால கட்டத்தில் உலக அளவில் மேற்கொள்ளப்படவில்லை. இவை தொழிலாளிவர்க்க இயக்கத்திற்கு எதிரானதாகவும், பாட்டாளிவர்க்க தலைமையையும் சோசலிச புரட்சியின் உள்ளடக்கத்தையும் மறுதளிப்பதாகவும் கூட இருந்தன. இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகான காலத்தில் ஏகாதிபத்தியம் பற்றி மார்க்சிய - லெனினிய அடிப்படையிலான செறிவான ஆய்வும் விளக்கமும் இல்லாமல் போய்விட்டது. இதனால் புதிதாக உருவான புரட்சிகர சக்திகளிடையில் மிக விரைவாக மார்க்சிய சொற்களையுடைய ஏகாதிபத்தியம் குறித்த பல்வேறு பொருளாதார கோட்பாடுகளும், மார்க்சிய - லெனினிய உள்ளடக்கம் இல்லாத தோற்றங்களும் ஊடுருவின. இத்தகைய அந்நிய போக்குகள் குறித்த விஞ்ஞானபூர்வ திறனாய்வை மேற்கொள்ளவும் இவற்றுக்கு எதிரான உறுதியான நிலைபாடுகள் எடுக்கவும் கூடியதானஒரு சர்வதேசிய அமைப்பு இல்லாது போனதால் உலக மார்க்சிய -லெனினிய சக்திகளுக்கிடையில் குட்டி முதலாளியமாக சிதைவுறுதலானது மிக அதிகமாகவே இருந்தது.

நாம் மேலே விளக்கியவாறு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாவது காங்கிரஸ், 9 வது காங்கிரசுனுடைய லின்பியாவோ விலகல்களை மாற்றிக் கொண்டபோதிலும், சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் ஒரு சீர் செய்யும் இயக்கம் மேற்கொள்ளப்படாமையால் இயக்கத்தை பாதித்திருந்த தீவிரமான தவறுகள் திருத்தப்படாமலேயே போய்விட்டது. மேலும், மாவோவின் இறப்பினைத் தொடர்ந்து, நவீன காலனிகளாக உள்ள ஆசிய, ஆப்பிரிக்க , லத்தீன் அமெரிக்க நாடுகள் சுதந்திர நாடுகள் என்று டெங்கினுடைய மூன்றுலகக் கோட்பாடு மூலம் பறைசாற்றப்பட்டது. 11 வது காங்கிரசில் ஹுவா குவா பெங், குருச்சேவ் கால்கட்டத்தில் முன்வைத்ததைப் போலவே சமாதான சகவாழ்வை முன்வைத்தார். இத்துடன்மூன்றுலகக் கோட்பாடானது உலகப் புரட்சியின் யுத்ததந்திரமாக பிரகடனம் செய்யப்பட்டது. மார்க்சிய - லெனினிய சக்திகளுக்கிடையில் இவை அனைத்தும் வேறுபடுத்தல் மற்றும் கேள்விக் குட்படுத்தல் இல்லாமல் போனது. இதன் காரணம் அடிப்படை லெனினிய போதனைகளை இயக்கம் புறக்கணித்து விட்டதே ஆகும். சீனக்கம்யூனிஸ்ட் கட்சியிலும் விலகல்களின் வளர்ச்சியானது ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு சென்றது. ஒரு போக்கு இன்னொன்றை மறைத்துக் கொண்டுள்ளது என்று மாவோவும் இதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

## இன்றைய 'மாவோயிசம்' பழைய தவறுகளின் மறுஉரு

இன்று 'மாவோயிசம்' குறித்து பேசுபவர்கள் அனைவரும் தெரிந்தோ அல்லது தெரியாமலோ பழைய அதே தவறுகளை மீண்டும் இழைக்க முயற்சி உடையவர்களாக இருக்கிறார்கள். இன்றைய சகாப்தம் குறித்த லெனினிய கருத்தாக்கத்தை மறுப்பவர்கள் புரட்சியின் உள்ளார்ந்த புறநிலை அடித்தளத்தை மறுப்பவர்கள் ஆகிறார்கள். இத்தகையோருக்கு புரட்சியானது ஏதோ அகநிலையானதாகவும் , ஆயுதங்கள், இராணுவ வலிமை, யுத்தத்தின் போர்தந்திரம் மற்றும் செயல்தந்திரங்கள் போன்றவையாகவுமே தென்படுகிறது: தொழிலாளிவர்க்கம் அல்லது அமைப்புகள் மற்றும் அமைப்பாக்கப்பட்ட மக்கள்திரள் இயக்கங்கள் ஆகியவற்றிடமிருந்து ஏதோ அந்நியமாகவே ஆகிறது. ஒரு புரட்சியானது, இன்றைய காலகட்டத்தின் குறிப்பான புறநிலை உண்மைகளையும் வரலாற்று வேர்களையும் சரியாக கொண்டிராவிட்டால் பாட்டாளிவர்க்க புரட்சிகளுக்கு உதவுவதற்கு மாறாக தடைகளை மட்டுமே உருவாக்கும். புரட்சிகளின் துரித வெற்றி குறித்த சாகசவாத கருத்தாக்கங்கள் தொழிலாளிவர்க்க இயக்கத்திற்கு உதவப் போவதில்லை. மாறாக மூலதனத்தின் நலன்களுக்கும் குட்டி முதலாளிய வீரர் வழிபாட்டுக்கும் மட்டுமே இறுதியில் உதவும். அமெரிக்காவின் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி (RCP) புரட்சிகர சர்வதேசிய இயக்கத்தில் (RIM) இணைந்துள்ள குழுக்கள் மற்றும் இவர்களைப் போன்றவர்கள் 'மாவோயிசத்தின்' வழக்குரைஞர்களாக இருக்கிறார்கள். இவர்கள் சீனப் புரட்சியின் பின்னணியிலும், சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் நடத்திய சித்தாந்த போராட்டத்திலும் மாவோ வளர்த்தெடுத்த மார்க்சிய - லெனினிய கோட்பாட்டு படிப்பினைகளை உண்மையில் உயர்த்திப் பிடிப்பதற்கு மாறாக லின்பியாவோ செய்தது போல் மாவோவின் சில மேற்கோள்களைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறார்கள். இன்னும் கூட சில புதிய லின்பியாவோ சிந்தனையாளர்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல், இந்த வழக்குரைஞர்கள்' மாவோயிசம்' பெயரால் மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை ஏதோ நம்பிக்கையின் கருத்தியல் கோட்பாடாக மாற்றுகிறார்கள். இன்றைய காலகட்டத்தில் ஏகாதிபத்தியத்திற்கும்

பாட்டாளி வர்க்க புரட்சிக்குமான முரண்பாட்டை, அடிப்படை முரண்பாடாக நிர்ணயித்து குறிப்பான அணுகுமுறை வகுத்துக் கொள்ளாமல் புறக்கணிப்பது அல்லது மறுப்பது 'மாவோயிசம்' பேசும் வழக்குரைஞர்களின் ஒரு பொதுப்பண்பாக உள்ளது.

## இந்த பின்னடைவுகளின் காலத்தில் மூன்றாவது அகிலத்தின் வழியை உயர்த்திப் பிடிப்போம்.

சர்வதேச கம்யூனிச இயக்கம் இன்று கடுமையான பின்னடைவுக் காலத்தின் வழியாக பயணித்துக் கொண்டிருக்கிறது. 50களின் மத்தியில் சோவியத் யூனியனில் அதிகாரத்திற்கு வந்த குருச்சேவிய திரிபுவாதத்தின் ஆதிக்கத்தின் கீழ் சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பாவிலுள்ள இதர சோசலிச நாடுகளும் முதலாளித்துவ பாதைக்கு மாறிச்சென்றன. அவற்றோடு உலகத்திலுள்ள பெரும்பான்மையான கம்யூனிஸ்ட் கட்சிகள் எல்லாம் முதலாளித்துவ பாராளுமன்ற வாத பாதையில் சீரழிந்தன. இத்துடன், சாவதேச கம்யூனிச இயக்கம், சீனக்கம்யூனிஸ்ட் கட்சியாகவும், அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சி ஆகவும், மற்றும் ஒரு சில மார்க்சிய லெனினிய கட்சிகளாகவும் அவற்றோடு இணைந்திருந்த அமைப்புகளாகவும் சுருங்கப் பெற்றன. ஆனால் மாவோ இறந்தபிறகு, சீனக்கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீன அரசு ஆகிய இரண்டிலும் அதிகாரத்தைக் கைப்பற்றிய டெங் - ஹுவா கும்பல் குருச்சேவிய கொள்கைகளை புதிய வடிவிலும் மிக வேகமாகவும் அமுல்படுத்த துவங்கியது. சீக்கிரத்தில் அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சி அதே பாதையைக் கடைப்பிடித்தது. தற்போது, பெயரளவிலாவது சோசலிசம் என்ற வார்த்தையை பயன்படுத்திக் கொண்டிருந்த சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் திறந்த சந்தைப் பொருளாதாரத்திற்கும், முதலாளித்துவ ஜனநாயகத்திற்கும் நகர்ந்திருக்கின்றது. இத்துடன், சர்வதேச கம்யூனிச இயக்கம், தற்போது உலகத்தின் பல்வேறு பகுதிகளில், சிதறியிருக்கும் ஒரு சில மார்க்சிய லெனினிய கட்சிகளாகவும், அமைப்புகளாகவும் சுருக்கப்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் தொடர்ந்து கைவிடப்பட்ட இந்த சவால்களை எதிர்கொண்டிருக்கும் சர்வதேச கம்யூனிச இயக்கம் இப்போது அந்த பின்னடைவுகளை முறியடிப்பதற்காகவும் மீண்டும் பலம் பெறவும் கடுமையான முயற்சிக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இரண்டாவது அகிலத்தின் போது, உலக சோசலிச இயக்கம், ஏறத்தாழ இதேபோன்றதொரு பின்னடைவால் துயருற்று இருந்தது. அந்த நேரத்தில், ஐரோப்பாவின் ஒரு வலிமைவாய்ந்த சக்தியாக அப்போது இருந்த சமூக ஜனநாயக இயக்கத் (அந்த நாட்களில் பாட்டாளி வர்க்க இயக்கம் அவ்வாறு அழைக்கப்பட்டது) தலைமையானது ஏறத்தாழ முழுவதும் திரிபுவாதம், பாராளுமன்ற வாதம் மற்றும் முதலாளித்துவ அரசியலாக சீரழிந்த சமூக ஜனநாயகம் போன்றவற்றின் பேச்சாளர்களாக மாறினர். இரண்டாவது அகிலமும், ''சமூக ஜனநாயகம்'' என்ற சொல்லும் துரோகத்தின் அடையாளங்களாக மாறிய சூழலில் இதை முறியடித்ததன் மூலம் லெனின் தலைமையின் கீழ் அக்டோபர் புரட்சி வெற்றிகரமாக நடந்தது. மூன்றாவது அகிலமும் உருவாக்கப்பட்டது. உலகம் முழுவதிலும் உள்ள எண்ணற்ற நாடுகளில் சமூக ஜனநாயக கட்சிகள் இருந்த இடத்தில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் உருவாக்கப்பட்டன. இரண்டாம் அகிலத்தின் காவுத்ஸ்கியத் தலைமையினால் கைவிடப்பட்ட பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் பதாகை மார்க்சிஸ்ட் லெனினிஸ்டுகளால் மீண்டும் ஒரு முறை ஏற்றப்பட்டது. முதலாளித்துவம், ஏகாதிபத்தியத்திற்கு மாறிச்செல்லும் காலத்தில் ஏகாதிபத்திய முறையின்

இயக்கவிதிகளை சரியாக மதிப்பீடு செய்வதிலும், உட்கிரகித்துக் கொள்வதிலும் பாட்டாளிவர்க்க இயக்கத்தில் நிகழ்ந்த பலவீனத்தின் பின்னணியிலிருந்து, இரண்டாம் அகிலத்தின் வீழ்ச்சியை லெனின் ஆய்வுசெய்தார். அதே சமயத்தில் அவர் புதிய உலக நிலைமையின் பின்னணியில் ஐரோப்பிய பாட்டாளிவர்க்க இயக்கத்தில் இருந்த தொழிலாளி வர்க்க உயர்குடி வளர்ச்சியோடு அதை தொடர்புபடுத்தினார். ஏகாதிபத்தியம் குறித்த காவுத்ஸ்கியின் கண்ணோட்டத்தைப் புறக்கணித்துவிட்டு லெனினால் வளர்த்தெடுக்கப்பட்ட பாட்டாளிவர்க்கப் புரட்சியின் தத்துவம் மற்றும் நடைமுறையின் அடிப்படையில் மூன்றாவது அகிலத்தின் தலைமையின் கீழ் உலக பாட்டாளிவர்க்க இயக்கம், சிறந்த முன்னேற்றங்களை கொண்டிருக்கும் காலமாக, இந்த நூற்றாண்டின் முதல்பாதி மாற்றப்பட்டது. உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒருபகுதியை கொண்டிருக்கும் நாடுகளை சோசலிச பாதைக்கு மாறிச் செல்வதற்கு வழியேற்படுத்தியது. எல்லாக்கண்டங்களிலும் மிகப்பெரிய கம்யூனிஸ்ட் இயக்கங்கள் பிறப்பெடுத்தது, தேசிய விடுதலைப்போராட்டங்களை பலப்படுத்தியது ஆகிய இந்த முன்னேற்றங்கள், உலக அளவில் மிகப்பெரிய புரட்சிகர புயலைக் கட்டவிழ்த்துவிட்டன. ஆனால் இந்த நூற்றாண்டின் மத்தியில், இரண்டாம் உலகப்போரின் சூழ்நிலைமையில் புதிய சவால்கள் எழுந்துள்ள இந்த காலத்தின்போது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோவியத் ஒன்றியத் தலைமைகள் குருச்சேவிய திரிபுவாதத்தினால் பலவந்தமாக கைப்பற்றப்பட்டன. முன்னர், மார்க்சிய லெனினியத்தால் புறக்கணிக்கப்பட்ட இரண்டாவது அகிலத்தின் நிலைபாடுகள் மீண்டும் புதிய வடிவங்களில் முன்னணிக்கு கொண்டு வரப்பட்டன.

ஸ்டாலின் தலைமையின் கீழ் இருந்த மூன்றாம் அகிலத்தின் கலைப்புக்குப்பிறகும், ஸ்டாலின் இறந்தவுடன் காமின் ஃபார்ம் (COMINFORM) செயலற்றதாக மாறிய பிறகும், 1957- 60 மாநாடுகளில் குருச்சேவிய வாதிகளுக்கு எதிரான போராட்டத்தின் மூலம் மார்க்சிய - லெனினிய பதாகையை உயர்த்திப் பிடித்திருந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் மார்க்ஸிஸ்டு - லெனினிஸ்டு சக்திகளை சர்வதேசிய அளவில் ஒருங்கிணைக்க எந்த வடிவத்திலும், எந்தவிதமான முயற்சிகளும் இல்லை. பின்னர் மாபெரும் விவாதத்தின் போது பருமையான பொதுவழி மற்றும் இதர ஆவணங்கள் முன்வைக்கப்பட்ட சமயத்திலும் கூட மேலே கண்ட முயற்சியில்லை. 1960 களை தொடர்ந்து அந்த இடைவெளிக்கு பிறகு தான் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அரசின் தலைமைகள் திரிபுவாதிகளால் பலாத்காரமாக கைப்பற்றப்பட்ட பிறகு தான் முதல் முயற்சியாக, அது சிறிதாக இருந்தபோதிலும், சர்வதேசிய கம்யூனிச இயக்கத்திற்குள் மார்க்சிய லெனினிய சக்திகளை கொண்டுவருவதற்கான முன் முயற்சிகள் எடுக்கப்பட்டன. நிகழும் பத்தாண்டுகளில் இந்த திசையில் ஒரு சிறந்த விழிப்புணர்வு கண்கூடாகத் தெரிகிறது. குருச்சேவிஸ்ட்கள், டெங்கிஸ்டுகள், 'மாவோயிஸ்டுகள்' மற்றும் பல இதர போக்குகள் ஆகியவற்றால் பேரளவில் பாதிக்கப்பட்டுள்ள தற்போதைய குழப்பமான அரசியல் சூழ்நிலையில், உறுதியான மார்க்சிய- லெனினிய நிலைபாடுகளில் இருந்து சமரசமற்ற வழியிலான கருத்தியல் போராட்டம் தான் கருத்தியல் தளத்தில் தேவையாக உள்ளது. அதுதான் லெனினால் நமக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள மூன்றாவது அகிலத்தின் வழியாகும். மார்க்சியத்தின் பெயரால் முழுவதும் மார்க்சிய நிலைபாடுகளுக்கு எதிரான முதலாளித்துவ கருத்தியல்கள் பரந்த அளவில் பிரச்சாரம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு சூழலில் மார்க்சியத்தின் அடிப்படை கோட்பாடுகளை பாதுகாப்பதற்கான போராட்டமே முடிவான முக்கியத்துவம்

வாய்ந்ததாகும். மார்க்சியத்தின் உயிரோட்டம் அல்லது சாரம் என்பது பருமையான நிலைமையை பருமையாக ஆய்வதாகும். மார்க்சியத்தின் இருப்பும், வளர்ச்சியும் இந்த அணுகுமுறையுடன் தொடர்புடையதாகும். மார்க்சியத்தின் அடிப்படை கோட்பாடுகளை உயர்த்திப்பிடித்து ஒரு புதிய, ''புரட்சிகரமான'' ஒற்றுமையை கட்டியமைப்பதும் அவற்றின் அடிப்படையில் சர்வதேசிய நிலைமையில் ஏற்பட்ட மாற்றங்களை பருமையாக ஆய்வு செய்வதுமே சர்வதேசிய அளவில் மார்க்சிய - லெனினிய சக்திகளின் கூடுதல் ஒற்றுமைக்கான அடிப்படையாகும்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியம்

பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தை பற்றிய படிப்பு சர்வதேசிய புரட்சிக்கான உள்ளடக்கத்தை பற்றிய படிப்புக்கும் கூட இட்டுச் செல்லும். சர்வதேசிய பாட்டாளிவர்க்க இயக்கத்திற்குள் சக்திவாய்ந்த முதலாளித்துவ தேசிய வெறி மற்றும் குறுங்குழுவாத சிந்தனைப் போக்கு செல்வாக்குடன் புலப்பட்டிருக்கும். தற்போதைய சூழலானது இதன் மீது சிறப்பு கவனத்தைக் கோருகின்றது. கம்யூனிச இயக்கத்தின் அடிப்படையான கோட்பாடுகளாக ஒரு சமயம் கருதப்பட்டவையும், கேள்விக்கிடமற்ற வகையில் ஆதாரக் கற்களாக உயர்த்திபிடிக்கப்பட்டவையும் இன்று பிரச்சனைகளாக்கப்பட்டு இழிவான வடிவங்களில் விவாதக்குறிப்புகளாக உருவாக்கப்படுகின்றன. கம்யூனிச பதாகையின் கீழ் முதலாளித்துவ தேசியவெறி சிந்தனைகளின் எல்லா வடிவங்களையும் ஊக்கத்துடன் முன்னேற்றிக் கொண்டிருக்கும் குட்டி முதலாளித்துவ குறுங்குழுவாத குழுக்கள், உலகத்தின் பல்வேறு பகுதிகளில் பெரும்பாலும் ஒத்த கண்ணோட்டங்களுடன் தோன்றிக்கொண்டிருக்கின்றன.

இதர தொழிலாளி வர்க்க கட்சிகளிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியை வேறுபடுத்தும் மிகவும் முக்கியமான காரணியை கம்யூனிஸ்ட் அறிக்கை கீழ்கண்டவாறு விவரிக்கின்றது. ''பல்வேறு நாடுகளில் உள்ள பாட்டாவர்க்கத்தின் தேசிய போராட்டங்களில் அவர்கள் சுதந்திரமாக எல்லா தேசிய இனங்களின் ஒட்டுமொத்த பாட்டாளிவர்க்கத்தின் பொது நலன்களை சுட்டிக்காட்டி, முன்னுக்கு கொண்டுவருகின்றனர்.'' ''எல்லா மனிதர்களும் சகோதரர்களே'' என்று இதுவரை இருந்த கம்யூனிஸ்ட் லீகின் குறிக்கோளை மாற்றி கம்யூனிஸ்ட் அறிக்கையால் முன்வைக்கப்பட்ட ''எல்லா நாடுகளிலுமுள்ள தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' என்ற முழக்கத்தை ஏற்றுக் கொண்டதுதான் சர்வதேச போராட்டத்தின் தன்மையின் திறந்த பிரகடனமாகும் என்று கம்யூனிஸ்ட் லீகின் வரலாற்றை எழுதும் பொழுது ஏங்கல்ஸ் பின்னர் விவரித்தார். (தேர்வு நூல்கள் - தொகுப்பு 3, பக்கம் 182) மார்க்சும் ஏங்கெல்சும் தேசியவாதம் மற்றும் சர்வதேசியவாதம் ஆகியவற்றை இரண்டு ஜனநாயக வடிவங்களாக பார்க்கவில்லை. ஆனால் அவற்றை வரலாற்று சூழ்நிலைமைகளை தீர்மானிக்கும் பருமையான வர்க்க உள்ளடக்கத்தை பெற்றிருப்பதாகக் கண்டார். ஏங்கெல்ஸ் எழுதினார்: ''மத்திய கால இறுதியிலிருந்து ஐரோப்பாவில் பெரிய தேசிய அரசுகளை உருவாக்குவதை நோக்கி வரலாறு பணியாற்றிக் கொண்டு இருக்கின்றது. இத்தகைய அரசுகள் மட்டுமே ஆளும் ஐரோப்பிய முதலாளித்துவத்தின் இயல்பான அரசியல் அமைப்புகளாகும். அதே நேரத்தில் அது மக்களிடையே சர்வதேசிய அளவில் இணக்கமான ஒத்துழைப்பை நிறுவுவதற்கான ஒரு அவசியமான முன்நிபந்தனையுமாகும். அதல்லாமல் பாட்டாளிவர்க்கத்தின் ஆட்சி என்பது இயலாத் ஒன்றாகும்.'' மார்க்ஸ் தனது கோதா வேலைத்திட்டத்தின் மீதான விமர்சனத்தில் விவரிக்கின்றார். '' போராட வேண்டுமானாலும் கூட தொழிலாளிவர்க்கம்

உள்நாட்டளவிலாவது ஒரு வர்க்க அமைப்பாக வேண்டும் என்பதும், அதன் சொந்த நாடுதான், வர்க்கப்போராட்டத்தைப் பொருத்தவரை, அதன் போராட்டத்தின் உடனடி யுத்தகளமாகும் என்பதும் சுய சாட்சியமாக உள்ளது. வர்க்க போராட்டத்தை பொருத்தவரை அந்த தேசியம் சாராம்சத்தில் அல்ல; ஆனால் கம்யூனிஸ்ட் அறிக்கையில் கூறியுள்ளபடி ''வடிவத்திலாகும்.'' ஆனால் ''இன்னாளைய தேசிய அரசின் திட்டப்பணி கூட உலகச்சந்தையின் திட்டப்பணிக்குள் பொருளாதார ரீதியாகவும் அரசு அமைப்புகளின் திட்டப்பணிக்குள் அரசியல் ரீதியாகவும் என மாறியுள்ளது.

''முதலாளித்துவம் உலகை மாற்றத்தொடங்கிய நாளிலிருந்து அதன் சொந்த கருத்துருவத்தில் தான் தீர்வுகண்டுள்ளது'' என்பதாளது அதன் உலகத்தன்மையை மிகத் தொடக்கத்திலிருந்தே எடுத்துக் காட்டுகின்றது. உலக அளவில் முதலாளிய உறவுகளை பரவச் செய்யும் அதே சமயத்தில் உடன்நிகழ்வாக அதற்கெதிராக ஒருசர்வதேசிய வர்க்கமான பாட்டாளிவர்க்கத்தையும் அது உருவாக்கி இருக்கிறது. அதோடு, ஏகாதிபத்தியம் அதன் செல்வாக்கை புலப்படுத்தி உலகத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி உறவுகளின்மீது தனது ஆதிக்கத்தை நிறுவுகின்றது. பரிமாற்ற உறவுகளை உலகளாவிய அளவில் ஆக்குவதன் மூலமும், அரசியல் அதிகாரத்தின் துணைக் கொண்டு வரி வசூலிப்பது உட்பட்ட எண்ணற்ற இதர வகைகளின் மூலமாகவும் ஏகாதிபத்தியம் உலகம் முழுவதும் பின்தங்கிய உற்பத்தி உறவுகளையும் சமூக அமைப்புகளையும் கூட உருவாக்குகின்றது.

மார்க்ஸ், ஏங்கெல்ஸின் மேற்கண்ட மேற்கோள்கள், மார்க்சியம் பாட்டாளிவர்க்க சர்வதேசியம் என்ற அம்சத்தையும், தேசியம் மற்றும் சர்வதேசியத்திற்கு இடையேயுள்ள உறவையும் சரியாக உணர்ந்து இருந்தது என்பதை காட்டுகின்றது. அத்தோடு, மிகவும் முன்னேறியுள்ள ஒரு வர்க்கமாக மற்றும் ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் விடுவிக்கும் வரலாற்று ரீதியான கடமையை கொண்டிருக்கும் பாட்டாளிவர்க்கம் புறநிலையில் அதல்லாமல் வேறெதுவுமாக இருக்கமுடியாது. கம்யூனிஸ்டு அறிக்கை ஒரு சர்வதேசிய அமைப்பான கம்யூனிஸ்டு லீகின் பிரகடனமாகும். மார்க்சும் ஏங்கெல்சும் முதலாம் அகிலத்தையும் பிறகு இரண்டாம் அகிலத்தையும் அமைப்பதில் முன்முயற்சி எடுத்தனர். இவற்றுக்கு மேலாக கம்யூனிஸ்டுகளால் வளர்த்தெடுக்கப்பட்ட புரட்சிகர கருத்தாக்கமானது சர்வதேசிய தன்மை வாய்ந்ததாகும். பாட்டாளிவர்க்க சர்வதேசியம், எல்லா முதலாளித்துவ குறுகிய தேசிய வெறி நிலைபாடுகளுக்கு பதிலாகவும் கூட வளர்ந்தது.

லெனின் தனது ஏகாதிபத்தியம் குறித்த ஆய்வுகளின் ஒரு பகுதியாக, ஒரு நாட்டில் புரட்சியானது வெற்றி பெறக்கூடிய சாத்தியம் உள்ளதென்றும், முதலாளியத்தின் தீவிர ஏற்றத்தாழ்வான வளர்ச்சி சூழல் நிலவினாலும் அங்கு சோசலிசத்தை கட்டும் வாய்ப்பு உள்ளதென்றும் நிருபித்தார்.

அக்டோபர் புரட்சியின் தத்துவ அடிப்படையாக இருந்த இந்த கணிப்பு, ஒரு உயர்ந்த மற்றும் புதிய வரலாற்றுச் சூழலில் மிகவும் வளர்ச்சியடைந்த தளத்தில் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தை நிறுவியுள்ளது. பூகோளரீதியாக கிழக்கு, மேற்கு ஆகிய இரண்டு கண்டங்களிலும் பரவியிருக்கும் ஒரு பின்தங்கிய முதலாளித்துவ நாடான இரஷ்யாவில் நிகழ்ந்த புரட்சி, சோசலிச புரட்சிகர இயக்கத்தை கொண்ட மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளுக்கும், தேசியவிடுதலை போராட்டத்தைக் கொண்டிருந்த கிழக்கத்திய காலனிய நாடுகளுக்கும் இடையில் ஒரு பாலமாக மாறியது.

அது பாட்டாளிவர்க்க சர்வதேசியத்திற்கு புதிய பரிமாணங்களைக் கொடுத்தது. தத்துவம், நடைமுறை ஆகிய இரண்டு மட்டங்களிலும் முதல் உலகப் போரின் போது இரண்டாம் அகிலத்தைத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த காவுத்ஸ்கீய வாதிகளின் தேசிய குறுகிய வெறிக்கெதிரான சமரசமற்ற போராட்டத்தின் மூலமாக அக்டோபர் புரட்சியானது வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது. முதலாளித்துவ தேசியவாதத்திற்கு வாலாக மாறியிருந்த இரண்டாம் அகிலத்தின் இடத்தில் உலகப்புரட்சியை நோக்கமாக கொண்ட மூன்றாவது அகிலம் அமைவதற்கு அது இட்டுச்சென்றது. லெனின் எழுதினார்: ''சோவியத் அதிகாரத்தை உயர்த்திப் பிடிக்கும் நமது பாட்டாளி மற்றும் விவசாய படைப் பிரிவு உலகத்தின் சிறந்த இராணுவத்தில் உள்ள ஒரு படைப்பிரிவாகும். ....சர்வதேசிய சோசலிச புரட்சி''. லெனின் இந்த விஷயத்தை இந்த கூற்றுகளால் திரும்பத் திரும்ப விவரித்து இருக்கின்றார். ''சோசலிச பாட்டாளிவர்க்க ரஷ்ய சிறப்பு படைப்பகுதி'', ''உலக சோசலிச புரட்சியின் இதர சிறப்பு படைப்பகுதிகள்'' லெனின் மேலும் கூடுதலாக விளக்கினார் :- ''உலகப் பாட்டாளி வர்க்கபுரட்சியை துவக்கும் நிமித்தமாக, ஒருவர் தமது பிரதேசத்தின் பகுதியைக் தியாகம் புரிவது உட்பட மிகபெரிய தியாகங்களை செய்யக்கூட தயங்க கூடாது''.

புதிய உலக சூழ்நிலைமைக்கு ஏற்றவாறு, பாட்டாளிவர்க்க சர்வதேசிய நிலைபாட்டிலிருந்து முதலாளித்துவ தேசியவாதத்திற்கு எதிராக மார்க்ஸ் ஏங்கெல்ஸ் தொடுத்த போராட்டத்தை லெனின் மேலும் செழுமைப்படுத்திக்கொண்டு இருந்தார். மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை புறக்கணிப்பதை நாகரீகமாக மாற்றிக் கொண்டிருக்கும் இத்தறுவாயில்போது, இந்த விசயம் குறித்து மேலும் விரிவாக விளக்குவதற்காக லெனின் மேற்கோள் காட்டப்படுவது தேவையற்றதாக இருக்காது.

லெனின் கூறினார்: ''தேசிய வாதம் எவ்வளவுதான் '' மிகமிக நியாயமான'' ''தூய்மையான'' மிக மிக நயமான, பண்பட்டவகையைச் சேர்ந்ததாக இருந்தாலும், மார்க்சியம் அதை ஏற்று அத்துடன் ஒத்து நிற்கமுடியாது. தேசியவாதத்தின் வடிவங்கள் அனைத்துக்கும் பதிலாக மார்க்சியம் சர்வதேசியவாதத்தை எடுத்து ஆதரித்து முன்னேற்றுகிறது. எல்லா தேசிய இனங்களும் ஒரு மேல் தரத்தில் ஐக்கியமுற்று இணைவதை மார்க்சியம் ஆதரிக்கிறது. இத்தகையதொரு ஐக்கியம் நம் கண் முன்னாலேயே வளர்வதைப் பார்க்கிறோம். இப்போது அமைக்கப்பட்டு வரும் ரயில் பாதையின் ஒவ்வொரு மைலுடனும் நிறுவப்பட்டு வரும் ஒவ்வொரு சர்வதேச ட்ரஸ்ட்டுடனும் அமைக்கப்படுகின்ற ஒவ்வொரு தொழிலாளர் சங்கத்துடனும், (இந்த சங்கம் தனது பொருளாதார நடவடிக்கைகளிலும் மேலும் கருத்துக்களிலும் குறிக்கோள்களிலும் சர்வதேசியமயமானது) இந்த ஐக்கியம் வளர்ந்து வருகிறது. (லெனின் தொகுப்பு நூல், 20, பக்கம் - 34) தேசிய போராட்டங்கள் எழும் ''வரலாற்று ஒழுங்கை'' அங்கீகரிக்கும் போதுகூட லெனின் ''தேசியவாதத்தின் தாசர்களாக'' மாறுவதிலிருந்து மார்க்சிஸ்டுகளை தடுக்க வேண்டியதன் தேவையைக் கண்டார். வேறொரு இடத்தில் லெனின் முதலாளித்துவ நலன்களின் தேசிய சர்வதேசிய முரண்களை மிகவும் சிறப்பாக விவரிக்கின்றார். அது வருமாறு: '' வளரும் முதலாளித்துவம் தேசிய பிரச்சனையில் இரண்டு வரலாற்று போக்குகளை காண்கிறது. முதலாவது தேசிய வாழ்வும் தேசிய இயக்கங்களும் விழிப்புற்று எழுதல், எல்லா தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராக போராடுதல் மற்றும் தேசிய அரசுகளை உருவாக்குதல் ஆகும். இரண்டாவது, ஒவ்வொரு வடிவத்திலும் சர்வதேசிய உறவை வளர்த்தல், தேசிய தடைகளை உடைத்தல், மூலதனத்தில், பொதுவாக பொருளாதார வாழ்வில், அரசியல் விஞ்ஞானம் முதலியவற்றில் சர்வதேசிய ஒற்றுமையை உருவாக்குதல் ஆகும்.''

''இந்த இரண்டு போக்குகளும் முதலாளித்துவத்தின் உலகளாவிய விதியாகும். முன்னது, அதன் வளர்ச்சியின் ஆரம்பத்தில் மேலாதிக்கம் செலுத்துவதாகவும் பின்னது, ஒரு முதிர்ந்த முதலாளித்துவத்தின் தன்மையுமாகின்றது. அதாவது அது சோசலிச சமூகத்திற்கு மாறிச் சென்றுக் கொண்டிருக்கும் போக்காகும். மார்க்சிஸ்டு தேசியதிட்டம் இரண்டு போக்குகளையும் கணக்கிலெடுத்து கொள்கின்றது. முதலாவதாக, தேசங்களுக்கும் மொழிகளுக்குமிடையிலான சமத்துவம்; இந்த வகையில் எந்த வித் சிறப்புரிமைகளை அனுமதியாமைக்காக வாதிடுகின்றது. இரண்டாவதாக சர்வதேசியம் என்ற கோட்பாடு மற்றும் மிகவும் சீர்த்திருத்தப்பட்ட முதலாளித்துவ தேசியவாதத்துடன் பாட்டாளிவர்க்கமானது மாசுபடுதலை எதிர்த்த சமரசமற்ற போராட்டம்.'' (தொகுப்பு நூல், 20 - பக்கம் 21)

'மூலதனம் அங்கீகரிக்கும் தந்தைநாடு இல்லை' என்பதைபற்றி பேசும் லெனின் மூலதனமானது உலகமயமாதல் ஆவதால் முதலாளிய தேசியத்தை தொடர்ச்சியாக கடந்து செல்வதையும், அது எவ்வாறு சோசலிசத்தின் வெற்றிக்கும் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்திற்கும் ஊக்கமளிப்பதாக இருக்கிறதுஎன்பதையும் திரும்பதிரும்ப விளக்கிக் கூறியிருக்கின்றார். மார்க்சிய நிலைபாடுகளைப் பின்பற்றிய லெனின், ''வரையறுக்கப்பட்ட தேசிய, அரசு பிரிவுகளில் உலக முதலாளித்துவத்தின் உற்பத்தி சக்திகள் அதிகமாக வளர்ச்சியடைந்து இருக்கின்றன; சோசலிசத்தை நிறைவேற்றுவதற்கான புறச்சூழ்நிலைமை சரியாக கனிந்திருக்கின்றது,'' என்ற முடிவை அடைகின்றார். மேலும் ஏகாதிபத்தியம் என்பது ''தேசியஅரசுகளின் எல்லைக்கு அப்பால் அதிகமான விரிவடைந்திருந்த மூலதனம்'' என்று லெனின் விளக்குகின்றார். லெனின், அரசியல் பொருளாதார களத்தில் மட்டுமல்லாமல் பண்பாட்டு களத்திலும் கூட சர்வதேசியவாதத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்றார். அவர் எழுதினார்: 'தேசிய கலாச்சாரம்' என்ற முழக்கத்தை நமது பதாகை ஏந்திச் செல்லாது. சர்வதேசிய அளவில் மூலதனத்தின் ஒருங்கிணைதலுக்கான வழியை ஏற்கெனவே ஏற்படுத்தியிருக்கும் நிலைமையில் அனைத்து தேசங்களையும் ஒன்றுபடுத்தும் உயர்ந்த சோசலிஸ்ட் ஒற்றுமையை அடையச் செய்யும் சர்வதேச கலாச்சார முழக்கத்தை கொண்டு செல்லும்.''

மூலதன உலகமயமாக்கல் அதன் உச்ச அளவை எட்டிக் கொண்டிருக்கும், உலக மூலதனத் தொடர்பானது முழுமையடைந்து கொண்டிருக்கும் இந்த நவகாலனிய சூழ்நிலையில் முதலாளித்துவம், முற்போக்கான தேசியத்துக்கான பிரதிநிதிகளாக மாற இயலாது. இப்படியிருக்கும் போது பாட்டாளிவர்க்க சர்வதேசியத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கும், உலக ஏகாதிபத்திய அமைப்பிற்கு எதிராக சர்வதேச பாட்டாளிவர்க்கத்தின் தலைமையிலான போராட்டத்தின் ஒருபகுதியாயிருக்கும், கம்யூனிஸ்ட்கள் தேசியவாதத்தின் முற்போக்கான எல்லைக்கு அப்பால் தேசியவாதத்தைப்பற்றி ஏதாவது பேசுவதும், தேசிய போராட்டங்களை ஆதரிப்பதும் முதலாளித்துவத்தின் நிலையான அழிவுக்குள் தொழிலாளிவர்க்கத்தை கட்டிப்போடும் தீமைபயக்கும் முயற்சிகளாகும். இதற்கு மாறாக அண்மையில் ''புரட்சிகர இயக்கங்கள்'' சிலவற்றில் தேசிய வாதத்திற்கு கொடுக்கப்படும் அழுத்தமானது மார்க்சியத்தின் எந்த ''எல்லை''களையும் காண்பிக்கவில்லை. மேலும் அது மார்க்சியத்தின் ''வளர்ச்சிக்கு'' எந்த பங்களிப்பையும் செய்யவில்லை. மாறாக, புரட்சிகர இயக்கங்களில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு எதிரான இரண்டாம் அகிலத்தின் தேசியவாத நிலைபாடுகளை துடைத்தெறிவதன் விளைவாகவே அது அங்கீகரிக்கப்பட வேண்டும். உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அதன் போராட்டத்தில் சர்வதேச பாட்டாளிவர்க்க

அணிகளிடத்தில் தேசிய வாதம் பிளவுகளை உருவாக்குவதற்கே இட்டுச்செல்லும். லெனின் எழுதினார் :- ''முதலாளித்துவ ஆதிக்கம் சர்வதேசிய அளவில் இருக்கின்றது. எனவேதான் சர்வதேச மூலதனத்தை எதிர்த்து தொழிலாளர்கள் அனைவரும் இணைந்து போரிட்டால் தான் எல்லா நாடுகளிலுமுள்ள தொழிலாளிவர்க்க விடுதலைக்கான போராட்டத்தில் வெற்றி பெற இயலும்''

***புதிய ஜனநாயக புரட்சி:***

***உலக சோசலிச புரட்சியின் பகுதி***

உலகப் பாட்டாளிவர்க்க இயக்கத்தின் இருத்தலானது நவீன காலனிகளின் தேசிய விடுதலைக்கு அவசியமான நிபந்தனையாகும். இந்த அடிப்படையான கோட்பாடானது லெனினுடைய காலனிய ஆய்வுரை மற்றும் இது தொடர்பான பிற ஆய்வுரைகளில் விவரிக்கப்பட்டுள்ள புதிய ஜனநாயக புரட்சிக்கான தத்துவ அடித்தளத்தில் விளக்கப்பட்டுள்ளது. லெனின் இந்த விஷயத்தை இவ்வாறுதான் விளக்கினார். ''கீழ்வருமாறு பிரச்சினை எழுப்பப்பட்டது: இன்று விடுதலைப்பாதையில் நடைபோட்டு வருகிற யுத்தத்திற்கு பிறகு கொஞ்சம் முன்னேற்றம் காண்பதாகவும் உள்ள பிற்பட்ட நாடுகளுக்கு பொருளாதார வளர்ச்சியின் முதலாளித்துவக் கட்டம் தவிர்க்க முடியாதது உண்மையா? இல்லை என்று நாங்கள் பதில் அளித்தோம். வெற்றி பெற்ற புரட்சிகரமான பாட்டாளிவர்க்கம் அவர்களிடையே திட்டமிட்ட ரீதியில் பிரச்சாரம் நடத்தினால் சோவியத் அரசாங்கங்கள் அவற்றின் உதவிக்குத் தன்னிடம் உள்ள எல்லா சாதனங்களுடனும் வந்தால் அப்போது முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டம் பிற்பட்ட நாடுகளுக்கு தவிர்க்க முடியாதது என்று கருதுவது தவறாக இருக்கும்''. (லெனின் தேர்வு நூல்-3 , பக்கம் - 412) மேலும் அதிகமாக லெனின் தேசிய விடுதலைப் போராட்டங்களின் வெற்றிக்கு பாட்டாளிவர்க்க சர்வதேசியம் தான் உத்திரவாதமளிக்கக் கூடியது என்று தெளிவு படக் கூறினார். ''இந்த அடிப்படையான ஆதார உரைகளிலிருந்து பெறப்படுவது வருமாறு ஆகும். தேசிய மற்றும் காலனிய பிரச்சனைகளில் கம்யூனிஸ்ட் சர்வதேசியத்தின் கொள்கை முழுவதும், நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் தூக்கி எறிவதற்கான ஒரு கூட்டான புரட்சிகர போராட்டத்திற்காக எல்லா தேசங்கள் மற்றும் நாடுகளின் பாட்டாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்கள்திரளின் நெருங்கிய கூட்டுறவில் தான் முதன்மையாக இருக்க வேண்டும் என்பது தெளிவானதாகும். ஏனெனில் இந்த கூட்டுறவுதான் முதலாளித்துவத்தின் மீது வெற்றி கொள்வதை உத்திரவாதம் செய்யும்: இதிலல்லாமல் தேசிய ஒடுக்கு முறையையும் சமத்துவம் இன்மையையும் ஒழிப்பது சாத்தியமல்ல.'' ( லெனின் தேர்வு நூல்- 3 , பக்கம் - 377)

''சுரண்டும் நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் காலனிகளின் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் ஒரு விதமான நெருக்கம் ஏற்பட்டு விட்டது. எனவே மிக அடிக்கடி- ஒரு வேளை அநேகமாக எல்லா வழக்குகளிலுமே ஒடுக்கப்பட்ட நாடுகளின் முதலாளித்துவ வர்க்கம் தேசிய இயக்கத்தை ஆதரித்த போதிலும் அது ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்துடனும் கைகோர்த்து வேலை செய்து வருவதுடன் எல்லா புரட்சிகரமான வர்க்கங்களுக்கும் எதிரான சக்திகளையும் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறது.'' (லெனின் தொகுப்பு நூல் 41, பக்கம்-144) காலனிய கொள்கையின் இத்தகைய நோக்குநிலையின் விளைவாகவே '' பூர்ஷ்வா ஜனநாயகம்'' என்பது ''புரட்சிகர தேசியம்'' என்று திருத்தி அமைக்கப்பட்டது. மூன்றாவது

அகிலத்தின் விவாதங்களின் போது காலனிய நாடுகளில் இருந்த முதலாளித்துவ வர்க்கத்தின் இரட்டைத்தன்மைகள் பற்றிய புரிதலுடன், புரட்சிகர சக்திகளுக்கு எதிராக அது ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்துடன் கொண்டிருந்த பிற்போக்கு கூட்டணியும் அம்பலப்படுத்தப்பட்டது. பாட்டாளிவர்க்கம் ஒரு குறிப்பிடத்தக்க சக்தியாக வளர்ந்திருக்காவிட்டாலும் கூட; இத்தகைய நாடுகளில், ஜனநாயகப் புரட்சி என்பது உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாகும் என்றும் அதற்கு உலகப் பாட்டாளி வர்க்க அமைப்பானது தலைமை அளிக்க வேண்டும் என்றும் லெனின் சுட்டிக் காட்டினார்.

லெனினால் துவக்கப்பட்ட இந்த பாதைதான் பின்னர் ஸ்டாலின் ''மூன்றாவது அகிலம்'' மாவோ ஆகியோரால் வளர்த்தெடுக்கப்பட்டது. புதிய ஜனநாயகப் புரட்சித் தத்துவத்தின் அடிப்படை நோக்கானது, கம்யூனிஸ்ட் அகிலத்தின் தலைமையில் சோவியத் யூனியனின் உதவியுடன் இந்த நாடுகளில் நடைபெறும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஜனநாயப் புரட்சியானது சோசலிச கடமைகளை நிறைவேற்றுவதை நோக்கி வளர்த்தெடுக்கப்பட முடியும் என்பதாக இருந்தது. சீனப் புரட்சியிலும் இதர தேசிய விடுதலைப் போராட்டங்களிலும் நடந்த முதலாளி வர்க்க துரோகத்தின் பருமையான அனுபவங்களின் விளைவாக, காலனிய நாடுகளில் உள்ள முதலாளிகள் புரட்சியின் தேசிய அல்லது ஜனநாயக கடமைகளை நிறைவேற்ற முழுவதும் அருகதையற்றவர்கள் என்பது தெளிவாயிற்று. இத்தகைய அனுபவங்களும் கூட லெனின் மற்றும் மூன்றாவது அகிலத்தின் நிலைபாடுகளை உறுதிபடுத்தின.

இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்த நவீன காலனிய இடைக்கட்டத்தில், உலகமயமாக்கப்பட்ட மூலதனம் ஆழம் மற்றும் விரிவு ஆகிய இரண்டிலும் புதிய பரிமாணங்களை பெற்றுள்ளது. இதனால் லெனின் முன்னரே கூறியிருந்த ''உடன்பாட்டை'' ஏகாதிபத்திய நாடுகள் மற்றும் நவீன காலனிகளில் உள்ள முதலாளி வர்க்கத்திடையே மேலும் கூடுதலாக்கியுள்ளது. இவர்களுக்கு இடையில் மிகவும் எதிர் புரட்சிகர வழியில் பொருளாதார மற்றும் அரசியல் உறவுகள் வளர்ந்துள்ளன. நவீன காலனிகளில் உள்ள முதலாளித்துவ வர்க்கம் புரட்சிகர சக்திகளுக்கு எதிராக தேசியம் மற்றும் ஜனநாயகத்திற்கு எதிரான பிற்போக்கு சக்திகளுடன் பெருமளவில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள உலக முதலாளித்துவத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக மாறி செயல்பட்டுக் கொண்டுள்ளது. அது புரட்சிகரமான முதலாளித்துவம் அல்ல; ஆனால் அது ஏகாதிபத்திய அழிவுக் கட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. நவகாலனிகளில் ஆளும் வர்க்கங்களாக மாறியுள்ள இந்த முதலாளித்துவம் தேசிய ஜனநாயகப் பணிகளை நிறைவேற்ற முழுவதும் அருகதையற்றது மட்டுமன்று; மேலும் அது உலக ஏகாதிபத்திய எதிர்புரட்சியின் பக்கம் அணிதிரண்டுள்ள முதலாளி வர்க்கமும் ஆகும்.

நவீன காலனிய நாடுகளில் ஏகாதிபத்தியத்திற்குஎதிரான ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றும் பொறுப்பு இன்றைய சூழலில் எப்போதுமில்லாத அளவுக்குதொழிலாளி வர்க்கத்திடம் அளிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் புரட்சி சீனப் புரட்சி நடைபெற்ற காலகட்டங்களோடு ஒப்பிடும் போது இன்றைய நவகாலனிய நாடுகளில் நிலவும் உழைக்கின்ற வர்க்கமும் உழைக்கும் வர்க்கத்தின் இயக்கமும் எண்ணிக்கையிலும் திறனிலும் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது.புரட்சிக்கு முந்தைய ரஷ்யாவோடு ஒப்பிடும்போது பல நவகாலனிய நாடுகளில் இருக்கும் மக்கள் தொகைக்கும் உழைக்கும் வர்க்கத்திற்கும் இடையிலான விகிதாச்சாரம் மிகவும் அதிகமாகும். ஆனால் இத்தகைய

நாடுகளில் வளர்ந்த முதலாளித்துவ உறவுகளின் ஒரு பகுதியாக உள்ள தொழிலாளி வர்க்கம் ஒரு செறிந்த ஜனநாயக புரட்சியின் மூலமாக உருவாகவில்லை. மாறாக, ஏகாதிபத்திய நவீன காலனிய அரசுகள் மேலிருந்து திணித்த சீர்திருத்தங்களின் மூலமாக தோன்றியது. இத்தகைய நாடுகளில் இன்னும் நிலவிவரும் முதலாளித்துவத்துக்கு முந்தைய பல்வேறு உறவுகளின் செல்வாக்குகளிலிருந்து இந்த தொழிலாளி வர்க்கம் விடுபடாமல் இருக்கின்றது. அது இன்னும் எதிர்ப்புரட்சி கருத்துக்களின் செல்வாக்கில் இருக்கின்றது. இந்த நாடுகளில் ஜனநாயக புரட்சியின் வெற்றிக்கு, சர்வதேச பாட்டாளி வர்க்க சோசலிச இயக்கத்தின் ஆதரவும், பின்னணியும் தேவை என்பதை அது மீண்டும் சுட்டிக் காட்டுகின்றது.

மாசேதுங்கும் புதிய ஜனநாயகம் பற்றி என்ற புத்தகத்தில் சீனப்புரட்சியானது சோவியத் யூனியனின் உதவியில்லாமல் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பதை வலியுறுத்தி எழுதுகிறார் :- "இந்த சகாப்தத்தில் தான் உலகின் ஆறில் ஒரு பாகத்தில் உலக முதலாளித்துவம் முற்றிலும் சரிந்து விழுந்துவிட்டது ; உலகின் மற்ற பாகங்களிலே முதலாளித்துவ அழிவின் அறிகுறிகள் அப்பட்டமாக வெளிப்பட்டது; இந்த சகாப்தத்தில் தான், எஞ்சியுள்ள முதலாளித்துவ நாடுகள், என்றையும் விட காலனி, அரைக்காலனிய நாடுகளை அதிகமாக சார்ந்து நில்லாமல் தாம் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டது; இந்த சகாப்தத்தில் தான், சோசலிச அரசு உருவாக்கப்பட்டதோடு எல்லா காலனி, அரைக்காலனி நாட்டுமக்கள் விடுதலை போராட்டத்திற்கு தீவிர ஆதரவு அளிக்க தயார் என்ற தமது விருப்பத்தை சோசலிச அரசு வெளியிட்டது; இந்த சகாப்தத்தில் தான் முதலாளித்துவ நாடுகளில் உள்ள சமூக ஜனநாயக கட்சிகளின் சமூக ஏகாதிபத்திய செல்வாக்கில் இருந்து அந்நாடுகளின் பாட்டாளி வர்க்கம் கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டு, காலனி, அரைக்காலனி நாட்டு மக்களின் விடுதலை இயக்கத்திற்கு தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். இந்த சகாப்தத்தில் ஏகாதிபத்தியத்திற்கு அதாவது சர்வதேச முதலாளித்துவத்திற்கு எதிராக காலனி, அரைக்காலனி நாடுகளில் நடத்தப்படும் எந்த புரட்சியும் இனிமேல் பழைய உலக பூர்சுவா ஜனநாயக புரட்சியின் வகையைச் சேர்ந்ததாக இருக்கமுடியாது. அது புதிய வகையை சார்ந்ததாகவே இருக்கும். இனி, அது பழைய உலக பூர்சுவா அல்லது உலக முதலாளித்துவ புரட்சியின் ஒரு பகுதியாக இருக்கவில்லை. அது புதிய உலக பாட்டாளி வர்க்கத்தின், சோசலிச புரட்சியின் ஒரு பகுதியாக இருக்கிறது." (மாவோ, தொகுப்பு 2, பக்கம் 343).

வளர்ந்து வரும் ஏகாதிபத்திய பொருளாதார, அரசியல் உலக ஆதிக்கம், ஏகாதிபத்திய முறையின் வீழ்ச்சி, சோசலிச இயக்கத்தின் பின்னடைவுகள் போன்றதொரு புதிய சூழலில், புதிய ஜனநாயக புரட்சியின் தேசிய, சர்வதேசிய அம்சங்களை இணைக்கும் மாவோவின் இந்த அணுகுமுறை மிகப் பொருத்தமானதும் முக்கியமானதுமாக உள்ளது.

### *சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி.*

இன்றைய கட்டத்தில் தீர்மானமான முரண்பாடு எது என்பது பற்றி தனது காலனிய தேற்றத்தில் லெனின் எழுதியிருந்தார்: "உலக அரசியல் நிலைமை பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை இன்றைய நிகழ்ச்சி நிரலில் வைத்துள்ளது. உலக அரசியலின் எல்லா நிகழ்ச்சிகளும் ஒரு மையப் புள்ளியைச் சுற்றி அதாவது சோவியத் ருஷ்யாவின் குடியரசை எதிர்த்து உலக முதலாளித்துவ வர்க்கம் நடத்தும் போராட்டத்தைச் சுற்றி தவிர்க்க முடியாதவாறு சுழல்கின்றன. இந்த சோவியத் ருஷ்யாவின் குடியரசைச் சுற்றி ஒரு புறத்தில் எல்லா நாடுகளின் முன்னேறிய

தொழிலாளர்களின் சோவியத் இயக்கங்களும் மறுபுறத்தில் உலக ஏகாதிபத்தியத்தின் மீது சோவியத் அமைப்பு முறை வெற்றி பெறுவது ஒன்றிலேதான் தங்களுடைய மீட்சி இருக்கிறது என்பதைக் கசப்பான அனுபவத்தால் கற்று வருகிற காலனிகளிலும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களிடையேயும் உள்ள எல்லா தேசிய விடுதலை இயக்கங்களும் தவிர்க்க முடியாதவாறு சூழ்ந்து வருகின்றன''. லெனின் உலக ஏகாதிபத்தியத்திற்கும் சோசலிச முறைக்கும் இடையில் கண்ட முரண்பாட்டை பின்னர் குருச்சேவியவாதிகள் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்குமான முரண்பாடாக மட்டுமே குறுக்கியும், தேசிய வெறி உணர்விலும் விளக்கினர்.

இந்த விஷயத்தில் லெனினது அணுகுமுறை உள்ளார்ந்த முறையில் வேறுபட்டு இருந்தது. அடிப்படையில் வேறுபட்ட இத்தகைய இரண்டு நிலைபாடுகளில் மறைந்திருந்தது எதுவெனில் சோசியல் ஏகாதிபத்தியத்தின் பூர்சுவா குறுகிய வெறியும், பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் உள்ள இருவேறு அடிப்படைவர்க்க வேற்றுமைகளாகும். லெனின், சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான முரண்பாட்டையும், உழைப்புக்கும் மூலதனத்திற்கும் இடையிலான முரண்பாட்டையும், தேசிய விடுதலை போராட்டங்களுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான முரண்பாட்டையும் தனித்த ஒன்றாக காணவில்லை. இதற்கு மாறாக, அவற்றை ஒட்டு மொத்தமாக கண்டார். லெனினைப் பொறுத்தவரை பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் சோவியத் யூனியனின் தேசிய நலன்களுக்கும் இடையில் முரண்பாடு கிடையாது. ஏனென்றால் புரட்சிக்கு முன்பிருந்த முதலாளித்துவ அரசினைப் போல் ருஷ்ய அரசு சுரண்டல் அரசு அல்ல; ஆனால் உலகப் புரட்சியை நோக்கமாக எடுத்துக் கொண்டுள்ள ஒரு பாட்டாளி வர்க்க அரசாக உள்ளது. புரட்சியின் சர்வதேசிய நலன்களே அதன் உள்ளார்ந்த அடிப்படையாகும். முதலாளித்துவ தேசிய வெறியானது இதற்கு அந்நியமானதும் எதிரி வகைப்பட்டதும் ஆகும். லெனினால் முன்வைக்கப்பட்ட இத்தகைய செறிவான பாட்டாளி வர்க்க அணுகுமுறைக்கு மாறாக, முதலாளித்துவ இயந்திர பொருள் முதல்வாதமும் குறுங்குழு போக்கும் பிற்காலத்தில் சர்வதேசிய தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பலப்பட்டு, இந்த விசயத்தில் முதலாளித்துவம் எப்போதும் செய்வதுபோல் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து, தனிமைப் படுத்துவதற்கும் இட்டுச் சென்றது.

1963 - ன் மாபெரும் விவாதத்தில் பொதுவழி பற்றி எழுதப்பட்டிருந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடிதமானது உலகப் புரட்சிகர மார்க்சியத்தின் பொது வழியாக பின்னர் மாறியபோது, லெனினது மேற்படி அணுகுமுறையானது திரும்பத்திரும்ப பொதுவாக வற்புறுத்தப்பட்டது. 1957 மாஸ்கோ பிரகடனம் மற்றும் 1960 மாஸ்கோ அறிக்கையின் புரட்சிகர கோட்பாடுகளை அது கீழ்வருமாறு தொகுத்தளித்தது. ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்; உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களுடனும், ஒடுக்கப்பட்ட தேசங்களுடனும் ஒன்று சேருங்கள்; எல்லா நாடுகளிலும் ஏகாதிபத்தியத்தையும், பிற்போக்கையும் எதிர்த்து நில்லுங்கள்; உலக சமாதானத்திற்காகவும், தேசிய விடுதல்லக்காகவும், மக்கள் ஜனநாயகத்துக்காகவும், சோசலிசத்திற்காகவும் பாடுபடுங்கள்; சோசலிச முகாமை வலுப்படுத்தி விரிவடையச் செய்யுங்கள்; பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியை படிப்படியாக முழுவெற்றிக்கு கொண்டு செல்லுங்கள்; ஏகாதிபத்தியம் இல்லாத, முதலாளித்துவமில்லாத, மனிதனை மனிதன் சுரண்டுவதில்லாத ஒரு புதிய உலகத்தை ஏற்படுத்துங்கள்.''

உலக அளவில் நிலவும் அடிப்படை முரண்பாடுகளை பொதுவழி கீழ்வருமாறு முன்வைத்திருந்தது:''சோசலிச முகாமிற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையேயுள்ள

முரண்பாடு; முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்திற்கும், முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு; ஒடுக்கப்பட்ட தேசங்கள் மற்றும் மக்களுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு; ஏகாதிபத்திய நாடுகளிடையேயும், ஏகபோக முதலாளித்துவப் பிரிவுகளுக்குமிடையிலுமுள்ள முரண்பாடு''.

இந்த வரையறுப்புகளில் சில வேறுபாடுகள் இருப்பினும், இவைதான் தற்போதைய சகாப்தத்தில் அடிப்படை முரண்பாடுகளாக உள்ளவை என்று மூன்றாவது அகிலத்தாலும் ஸ்டாலினாலும் ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்டவையாகும். அதாவது 1963 பொதுவழி ஆவணத்தால் முன்மொழியப்பட்ட இந்த நிலைபாடானது, மூன்றாவது அகில நிலைபாட்டின் தொடர்ச்சியாக இருந்தது. ஸ்டாலின் இந்த முரண்பாடுகளை இன்றைய உலகின் அடிப்படை முரண்பாடுகள் என்று வழக்கமாக கூறி வந்தார். பொது வழி ஆவணமானது இந்த முரண்பாடுகளில் எந்த ஒன்றையும் தனிமைப் படுத்துவதையும், மற்றவற்றில் பாத்திரத்தை மறுப்பதையும் உறுதியாக எதிர்த்தது; அதிலும் குறிப்பாக சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் உள்ள முரண்பாட்டுக்கு மட்டும்முக்கியத்துவம் தருவதை எதிர்த்தது; மேலும் மற்ற முரண்பாடுகளை மறுப்பதற்கும் அல்லது குறைத்து மதிப்பிடுவதற்கும் (அழுத்தம் நமது) எதிராக பொது வழி ஆவணம் உறுதியான நிலையை மேற்கொண்டது. ஆவணம் கூறுகிறது:- இத்தகைய முரண்பாடுகளும், இவற்றால் தோற்றுவிக்கப்படும் போராட்டங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டிருக்கின்றன ; பரஸ்பரம் ஒன்றின் மீது மற்றொன்று செல்வாக்கு செலுத்துகின்றன. இந்த அடிப்படை முரண்பாடுகளில் எதையும் யாரேனும் மறைத்துவிட முடியாது. அல்லது தன் விருப்பப்படி ஒன்றை ஏனைய முரண்பாடுகளுக்குப் பதிலாக மாற்றி வைத்து விட முடியாது''.

மூன்றாவது அகிலம் மற்றும் மாபெரும் விவாதம் நிலைபாடுகளிலான அரசியல் நிலைபாடுகளின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்போது மட்டுமே, தற்காலத்தில் அடிக்கடி செய்வதைப் போல, ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் மக்களுக்கும் மற்றும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான முரண்பாட்டை தனித்தும், ஒருபக்க வழியிலும் அறிமுகப்படுத்துவதில் உள்ள தவறை உணர முடியும்.

முதலாளித்துவத்தின் கீழ் அடிப்படை முரண்பாடாக இருந்த மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான முரண்பாடானது உலகமயமாவதும் மற்றும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உலக பாட்டாளி வர்க்க சோசலிச இயக்கம் இருத்தலும் ஆகியவை நவீன காலனிகளில் புதிய ஜனநாயக புரட்சிகளின் வெற்றிபெறும் முன்னேற்றத்திற்கான அரசியல் பின்னணியை உருவாக்குகின்றன.

சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் இடையிலான முரண்பாட்டை, சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முரண்பாடாக குறுக்கிப் பார்த்ததுடன் இதை பிற முரண்பாடுகளில் இருந்து தனித்தும் ஒரு தலை பட்சமாகவும் அணுகிய குருச்சேவிய நிலைபாட்டை நாம் எதிர்க்க வேண்டும். அதே சமயம் மறுகோடிக்கு சென்று, ஒடுக்கப்பட்ட தேசங்கள் மற்றும் மக்களுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான முரண்பாட்டை ஒரு தலைப்பட்சமாகவும் தனித்தும் அணுகும் போக்கானது முதலாளித்துவத்திற்கு வால்பிடிப்பதற்கு இட்டுச் செல்வதையும் நாம் உணர வேண்டும்.

ஒருபுறம், ஏகாதிபத்தியத்திற்கு இடையிலான முரண்பாடும், இன்னொருபுறம், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலக பாட்டாளி வர்க்க சோசலிச இயக்கமும், அதன் தலைமையில் அதன் ஒரு பகுதியாக நிலவியு வளர்ந்துகொண்டிருக்கும் தேசியவிடுதலை இயக்கங்களும் தான் உலகத்தின் வளர்ச்சி போக்குகளை தீர்மானிக்கும் முக்கியமான ஒன்றாகும். வெளிப்புறத்தில் உலகமயமாகி பரஸ்பரம் பின்னிபிணைந்து தோன்றும் உலக ஏகாதிபத்திய அமைப்பு யதார்த்தத்தில் பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலேயும், எண்ணற்ற ஏகபோகங்கள் முதலாளித்துவ குழுக்கள் மற்றும் பிரிவுகள் ஆகியவற்றிற்கு இடையிலேயும் தீர்க்க முடியாத உள் முரண்பாடுகளை கொண்டிருக்கின்றது. அவற்றிற்கு இடையில் அழிவுக்கான, யுத்த நிகழ்வுகளுக்கான வாய்ப்புகள் உட்பட்ட போட்டிகள், உலகப் போருக்கான நிலையை தீவிரப்படுத்தவும் கூடும்.

மூன்றாவது அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் லெனின் உரையாற்றும் போது கூறுகின்றார்: ''மூலதனத்திற்கு எதிரான போராட்டத்தில், ஐரோப்பிய, அமெரிக்க பாட்டாளிவர்க்கம், மூலதனத்தால் அமுத்தப்பட்டிருக்கும் கோடிக்கணக்கிலான காலனிய அடிமைகளுடன் நெருக்கமான , முழுமையான ஐக்கியத்தை கொண்டிருக்காவிடில் , முன்னேறிய நாடுகளின் புரட்சிகர இயக்கம் என்பது ஒரு முழுமையான பித்தலாட்டமாகிவிடும்.''

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள தேசிய ஜனநாயக புரட்சிகர இயக்கங்களும் சர்வதேச சோசலிச புரட்சிகர இயக்கங்களும் நமது காலத்தின் மகத்தான இரண்டு வரலாற்று போக்குகளாகும். இந்த பகுதிகளில் உள்ள தேசிய, ஜனநாயக புரட்சி இவ்வாறாக, தற்கால பாட்டாளிவர்க்க உலகப் புரட்சியின் ஒரு முக்கிய அங்கமாகும்.

மூன்றாவது அகிலத்தின் நிலைபாடுகளைத் தொடர்ந்து, 1963 -ல் சீனகம்யூனிஸ்டு கட்சியால் முன் வைக்கப்பட்ட இந்த அடிப்படை வரையறுப்புகள் இன்னமும் சரியானவையே. இன்றைய பருமையான நிலைமைகளை உறுதிபடுத்திக் கொண்டு இந்த வரையறுப்புகளின் அடிப்படையில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொது வழியானது வளர்த்தெடுக்கப் படவேண்டும்.

## ஏகாதிபத்திய அமைப்பிற்குள் உள்ள நெருக்கடிகளும்

## முன்னாளைய சோசலிச நாடுகளின் தகர்வும்

முன்னாளைய எல்லா சோசலிச நாடுகளின் தகர்வானது உலகத்தில் எந்த சோசலிச முகாமும் இல்லை என்ற வாதத்தை எழுப்பியுள்ளது. பழைய வடிவத்தில் சோசலிசம் நீண்ட நாட்களுக்கு நிலவ இயலாது என்றும் , சோசலிச அமைப்பை விட முதலாளித்துவ அமைப்பே சிறந்தது என்பது நிருபணமாகியிருக்கிறது என்றும் மார்க்சியத்தின் பேரால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வாதிடுபவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களில் சிலர் தற்போதைய ''*சீன் மாதிரி* சோசலிசத்தை'' ஒரு தீர்வாக காட்டுகின்றனர். முதலாளித்துவ அமைப்பின் பலத்தை நிருபித்து இருக்கின்ற சந்தை பொருளாதாரத்தை தன்வயப்படுத்தி கொண்டுள்ள ஒரு கலப்பு சோசலிசம் தான் இப்போது நடைமுறை தீர்வாகும் என்றும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. பெரும்பான்மையான பேச்சாளர்கள் முன் வைக்கும் இந்த வாதங்களானது ''சோவியத் கம்யூனிசத்தின்'' மிச்ச சொச்சங்களாகும். அதாவது இவர்கள் குருச்சேவிய மற்றும்

குருச்சேவுக்கு பின்னர் உள்ள சோவியத் யூனியனை ஆதரித்து பாதுகாத்தவர்கள் என்பது குறிப்பிடத் தகுந்த அம்சமாகும். மேலும், முன்னர் நாம் செய்திருந்த ஆய்வுகளில் கண்டவாறு, இவர்கள் தான் ஏகாதிபத்திய தகர்வு பற்றியும் சோசலிசத்தின் எதிர்க்கப்படாத வெற்றியைப் பற்றியும் மேலோட்டமான வார்த்தைகள் பேசி, ஆவணங்களை தயாரித்திருந்தவர்கள். இன்று அவர்கள் எல்லோரும் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு சென்று இருக்கின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் ஒரு வலது நிலைபாட்டிலிருந்து இன்னொரு வலது நிலைபாட்டிற்கே சென்று இருக்கின்றனர். சோசலிசம் என்று காண்பித்து தன்னை காத்துக் கொள்ளும் முதலாளித்துவ தோல்விவாதம், எதிர்க்கப்படவும் தோல்வியடையவும் செய்யபட வேண்டுமானால், முன்னாள் சோசலிச நாடுகளின் மாற்றத்திற்கான உண்மையான காரணங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவருவது அவசியமாகின்றது. ''வலது'' மற்றும் ''இடது'' நிலைகளிலிருந்து மார்க்சியம் மற்றும் சோசலிசத்தின் தோல்வியைப்பற்றி புலம்பிக் கொண்டிருக்கும், மேலும் மார்க்சியம் மற்றும் சோசலிசத்தை வளர்த்தெடுக்கும் பெயரால் பல்வேறு முதலாளித்துவ பொய்புனைவுகளை தேடுவதில் போய் கொண்டிருக்கும் இந்த எல்லா முதலாளித்துவ தோல்வி சக்திகளை தோற்கடிப்பதே கருத்தியல் தளத்தில் முதன்மையான பணிகளில் ஒன்றாக மாறி இருக்கின்றது.

மாசேதுங் தலைமையிலான உலக புரட்சிகர சக்திகள் 60 களிலேயே, முதலில் யூகோஸ்லேவாகியா, பிறகு குருச்சேவிய சோவியத் யூனியன், அதை தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோசலிச பாதையை கைவிட்டுவிட்டு முதலாளித்துவ மீட்சி பாதைக்குள் சென்று இருந்தன என்ற நிலைபாட்டைக் கொண்டிருந்தனர். இந்நாடுகள் பல பத்தாண்டுகளாக சோசலிச மூடியின் கீழ் முதலாளித்துவ பாதையை கடைபிடித்து பலப்படுத்திக் கொண்டிருந்தன. அவை சோவியத் யூனியனின் சமூக ஏகாதிபத்திய கொள்ளையை ஆதரித்துவந்தன. முதலாளித்துவ மீட்சிபாதையுடன், இந்த நாடுகளின் பொருளாதாரம், மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளுடன் நிபந்தனையற்ற வகையிலான ஒருங்கிணைப்பைப் பெற்று வந்தன. இத்துடன் இந்த நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளால் அரசியல் ரீதியில் ஊசலாட்டத்திற்கு உள்ளாக்கப்பட்டன. இவைகளது தகர்வுக்கு முன்பு, கம்கான் நாடுகள் (Comecon) மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து பெற்ற கடன்கள் 5000 கோடி டாலர்கள் மிஞ்சியிருந்ததை ஒரு மதிப்பீடு காண்பித்தது. யூகோஸ்லேவாகியாவில், 1967ல் ஏற்றுக் கொண்ட சட்டத்தின்படி முதலாளித்துவ பாதையின் முதல் தேர்வாக, நிறுவனங்களின் 49 சதவிகித மூலதன பங்குகளை சொந்தமாக்கிக் கொள்ள வெளிநாட்டுக் கம்பெனிகள் அதிகாரம் அளிக்கப்பட்டன. 1970களிலேயே, யூகோஸ்லேவாகியாவில் அதைப்போன்ற 170 கூட்டு நிறுவனங்கள் தோன்றின என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. கிழக்கு ஜெர்மனி விஷயத்தில் மேற்கு ஜெர்மனியின் அதிகமான ஏற்றுமதிக்கான இரண்டாவது இடமாக அது மாறியிருந்தது. மேற்கு ஜெர்மனி உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு மூலாதாரம் வழங்கப்படுவதில் கிழக்கு ஜெர்மனி மூன்றாவது இடத்தில் உள்ளது. இவ்வாறு ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட கணக்குகளின்படி, இந்த எல்லா நாடுகளும் ஏகாதிபத்திய பொருளாதாரத்துடன் பெயளவிலான ஒருங்கிணைப்பை ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ளன். இந்த உறவுகள் தங்களின் நெருக்கடி சுமையை கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடம் மாற்றிக்கொள்ள மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளுக்கு

உதவின. முடிவில், உலக ஏகாதிபத்திய நெருக்கடியின் பலிகடாவாக அவை மாறின. மேலும், அவர்களாகவே முதலாளித்துவ பொருளாதாரமாக மாறியுள்ளதனால், அவர்கள் முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பில் உள்ள உலகந்தழுவிய நெருக்கடியிலிருந்து தங்களை விலக்கி வைத்துக் கொள்ள கூட முடியாது.

தற்போதைய நெருக்கடி கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து தான் ஆரம்பித்துள்ளது என்று முதலாளித்துவ வெற்றியை புகழ்ந்துரைப்பவர்கள் வேறொரு முக்கியமான தவறான பிரச்சாரத்தை கட்டவிழ்த்துள்ளனர். இதற்கு மாறாக, மேற்கு ஐரோப்பிய நாடுகள் 1960களின் இறுதியில் அனுபவித்த பெருகிவரும் நெருக்கடியின் விளைவினால் தான், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அடைந்தன. இந்த காலத்தில் ஏகாதியத்திய நாடுகளில் தேக்கமும் பணவீக்கமும் ஆகிய இரண்டும் இணைந்து ஒரு புதிய நிகழ்வாக தோன்றியது. 1967-ல் பிரிட்டனின் பௌன்ட் ஸ்டெர்லிங்கின் மதிப்பு குறைக்கப்பட்டது. 1968 வாக்கில் டாலருக்கும் தங்கத்துக்கும் உள்ள உறவு மிகவும்மோசமானது. 1969ல் பிரான்சில் அதன் நாணய மதிப்பை குறைத்தபோது மேற்கு ஜெர்மனியின் மார்க்கின் மதிப்பு மறுமதிப்பீடு செய்யப்பட்டது. 1971ன் இறுதியில் டாலரின் மதிப்பு குறைந்ததோடு, பிரட்டன்வுட் பணச்சார்பியம் சீர்குலைந்தது. இரண்டாவது உலகப்போருக்கு பிந்தைய பொருளாதார அதிரடி வளர்ச்சி இத்தோடு முடிவுக்கு வந்தது. இந்த நேரம் தொட்டு உற்பத்தி தளத்தில் ஏகாதிபத்திய நெருக்கடியும் தேக்கமும் ஒரு தொடர்ந்த அம்சமாகவே இருக்கின்றது. முடிவாக, ஏகாதிபத்திய பொருளாதாரம், தேக்கமடைந்த பொருளாதாரமாகவும், உற்பத்தி வளர்ச்சி வீதத்தில் வீழ்ச்சியும், வேலையில்லா திண்டாட்டம் அதிகரிப்பும் ஆக இருக்கின்றது. பொருளாதாரத்தின் எல்லா துறைகளிலும் திரும்பதிரும்ப ஏற்படும் சீர்குலைவே தொடர்ந்து எந்த தீர்வுமின்றி இருக்கின்றது. மேற்கண்ட மாற்றங்களின் விளைவாக இந்த நாடுகளை பாதிக்கும் தாக்கத்தை தடுக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, 1980 களில் அமுல்படுத்தப்பட்ட தாட்சரிசமும், ரீகன் பொருளியலும் இருந்தன. இது, முதலாளித்துவ பொருளாதாரத்தில் கெய்னீசிய வாதத்தை ஒரு முழுமையான முடிவிற்கு இட்டுசென்றது. பணச்சார்பியம் (Monetarism) ஆதிக்கத்துக்கு வர ஆரம்பித்தது. இந்த மாற்றத்தின் பொதுவான குணாதிசயங்களில் பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் பெருமளவிலான தலையீட்டை குறைத்துக் கொள்ளுதல், பொதுதுறைகளை "லாபகரமாக்க" தனியார் மயமாக்குதல், மக்கள் நலதிட்டங்களை குறைத்தல் போன்றவைகளாக சுருங்கிக் கொண்டிருந்தன. ஒரு அர்த்தத்தில், அரசு முதலாளித்துவத்துக்கு மாறியிருந்த முன்னாள் சோசலிச நாடுகளின் வீழ்ச்சியானது அந்த நாடுகளில் இந்த கொள்கைகளை அமுல்படுத்த செய்த மிகவும் பலவந்தமான முயற்சிகளின் விளைவாகும். இந்த நாடுகளில் சந்தை முறைக்கு மாறிய முழுமையான மாற்றத்தோடு கூட அமுல்படுத்தப்பட்டது வேறொன்றுமல்ல முதலாளித்துவ பொருளாதாரத்தின் பணசார்பியல் திட்டங்களாகும். ஏகாதிபத்திய நாடுகள், சந்தை முறைக்கு நகர்ந்து சென்ற முன்னாள் சோசலிச நாடுகள் ஆகிய இரண்டிலும் ஒவ்வொரு அர்த்தத்திலும், இந்த மாற்றங்கள் பொருளாதாரத்தின் மீது கட்டுப்பாட்டை செலுத்தும் அரசுக்கு எதிராக வெவ்வேறு அளவுகளில் பலத்த அடிகளைக் கொடுத்தன. இந்த மாற்றங்கள், முக்கியமாக கடந்த பத்தாண்டுகளின் போதான மாற்றங்கள் குறித்து, ஏகாதிபத்தியத்தின் தோற்றத்திற்கு பிறகு உள்ள அனைத்து மாற்றங்களின் பொதுவான பின்னணியில் தான் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

***ஏகாதிபத்தியத்தின் பொதுவான நெருக்கடி:***
***புரட்சியின் புறவய நிலைமைகளை வளர்த்தெடுக்கின்றன***

ஏகாதிபத்திய நாடுகளின் பணவீக்க வீதத்தை மேற்குறிப்பிட்ட பலமான திட்டங்களின் விளைவாக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தடுக்க முடிந்தாலும், தற்போதைய சூழ்நிலை என்பது இந்த நெருக்கடிக்கும், உற்பத்திதளத்தில் தேக்கத்திற்கும் இட்டு சென்ற அடிப்படையான காரணிகள் தீர்க்கப்பட முடியவில்லை. ஏகாதிபத்தியத்தின் சுழல் நெருக்கடியின் வேகம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலைமை மக்களின் குறிப்பாக ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள மக்களின் வாழ்நிலை குறியீட்டு எண்ணை கீழே இறக்கி கொண்டுள்ளது. எல்லா வகையான அரசு பாதுகாப்புவாதம் மற்றும் பொதுநல திட்டங்களையும் கைவிட்டதன் விளைவாகவும், உழைப்புச் சக்தியை முழுவதுமாகவும், இரக்கமற்ற வகையிலும் கட்டுப்படுத்துவதன் மூலம் சந்தை சக்திகளின் தாக்குதலுக்கு உட்படுத்தியதாலும் ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள தொழிலாளிவர்க்கத்தின் நிலை மோசமாகிகொண்டே வருகின்றது. புதிய நிர்வாக அணுகுமுறையின் விளைவாக, வேலையிடத்தில் முழுவாழ்வுக்கான குறைந்தபட்ச பாதுகாப்பு கொடுப்பதற்கு பதிலாக, தற்காலிகமான ஒப்பந்த அடிப்படையில் அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேலை கொடுக்கும் ஒன்றாக அது மாறியிருக்கின்றது. ஆலை மூடல்கள் கதவடைப்பு, லே-ஆப், ஆட்குறைப்பு போன்றவை பெருமளவில் அதிகரித்துக் கொண்டிருப்பதனால், வேலைபாதுகாப்பு என்பது அதிகரித்த அளவில் இல்லாமல் போய் கொண்டிருக்கின்றது. ஒப்பந்த வேலைமுறை என்பது உலக மயமாகிக்கொண்டிருக்கின்றது. சோசலிசமில்லாமலேயே வேலையில்லா திண்டாட்டத்திற்கு ஒரு முடிவு கட்ட முடியும் என்று ஏகாதிபத்தியம் ஒருமுறை சவடால் பேசியது. ஆனால் இன்று, சில ஏகாதிபத்திய நாடுகளில் வேலையில்லா திண்டாட்டம் 20 சதவிகித அளவுக்கும் கூட அதிகரித்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்கு பின்னால் ஏற்பட்ட ஏகாதிபத்திய பொருளாதார வளர்ச்சியின் பின்னணியில், உலக சோசலிசத்தின் அமைப்பாக்கப்பட்ட சக்திகள் மற்றும் சக்திவாய்ந்த சர்வதேச பாட்டாளிவர்க்க இயக்கத்தின் ஆதரவுடன் தொழிலாளிவர்க்கம் பெற்றிருந்த எண்ணற்ற உரிமைகளையும், சிறப்புரிமைகளையும், சட்டபாதுகாப்புகளையும் ஒவ்வொன்றாக இழந்து வருவதே இன்றைய உலகக் காட்சியாகும். முன்னாளைய சோசலிச நாடுகளின் தகர்வு இந்த போக்கை துரிதப் படுத்தியிருக்கின்றது. இந்த வளர்ச்சி போக்குகளின் ஒட்டுமொத்த கூட்டுவிளைவுகளின் விளைவாக, ஏகாதிபத்திய நாடுகள் உட்பட உலகத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய தொழிலாளி வர்க்கத்தின் முன்னேற்றங்கள் சுட்டிக்காட்டுவது இதுதான்; அதாவது ஏகாதிபத்தியத்தின் ஆரம்பத்திலிருந்தே வலிமை பெற்றுள்ள தொழிலாளிவர்க்க உயர்குடியினரின் போக்கு ஆட்டங்காண துவங்கியிருக்கிறது என்பதே அதுவாகும்.

வளர்ந்துவரும் நெருக்கடிகளின் சுமையை நவகாலனிய நாட்டு மக்களின் தோள்களுக்கு மாற்றிக் கொடுப்பதன் மூலம், ஏகாதிபத்தியம் குறைந்தபட்சம் தற்காலிமாகமாவது தன்னை காப்பாற்றிக் கொள்ள முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. இது, இந்த பத்தாண்டுகளின் போது, சமூக ஜனநாயகத்தின் துரோகத்தினால், அவர்களிடையே ஆதிக்கத்தை பெற்றிருந்த சீர்திருத்தவாத செல்வாக்கை இப்போது ஆட்டங்காண செய்யவும், மூன்றாவது அகிலத்தின் தலைமையின் கீழ் இந்த நாடுகளில் ஏற்கனவே வலிமைபெற துவங்கியிருந்த அமைப்பாக்கப்பட்ட தொழிலாளிவர்க்க இயக்கத்தை முன்னெடுக்கவும் கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும், பிற்போக்கு அரசு அதன் சீர்திருத்த தன்மையைக் கூட கைவிட வேண்டி

கட்டாயப்படுத்தபட்டுக் கொண்டிருப்பதனால், இந்த நிலைமை, அமைப்பாக்கப்பட்ட தொழிலாளிவர்க்கத்தையும், விவசாய வர்க்கத்தையும் புரட்சியின் பக்கம் மேலும் மேலும் செல்வதற்கு தூண்டிக் கொண்டிருக்கின்றது. இதை நிருபிக்கும் வகையில் உலகம் முழுவதும் தினந்தோறும் எண்ணற்ற கிளர்ச்சிகளும் கலகங்களும் தன்னெழுச்சியாக எழுகின்றன. உற்பத்தி மற்றும் காசாக்குதல் உட்பட அனைத்து தளங்களிலும் சந்தித்துக் கொண்டிருக்கும் நெருக்கடிக்கு முடிவு காண ஏகாதிபத்தியம், உலகம் முழுவதுமுள்ள எல்லா உற்பத்தித் துறைகளையும் தனது நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவும் அந்தக் கட்டுப்பாட்டை ஆழமாகவும், கணபரிமானத்திலும் விரிவுபடுத்தவும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. இதன் விளைவாக, அரசியல் குறுக்கீடுகளை மேலிருந்து திணிப்பதன் மூலமாக, நவகாலனிய நாடுகளில் உள்ள முதலாளித்துவத்திற்கு முந்தைய பழைய உற்பத்தி உறவுகளை அது மாற்றிக் கொண்டிருக்கிறது. இத்துடன் அவற்றை ஏகாதிபத்திய அமைப்புடன் ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கின்றது. அது விவசாய துறை மற்றும் இதர பின்தங்கிய துறைகள் ஆகியவற்றில் சந்தை உறவுகளை உயர்ந்தளவுக்கு அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இதன் விளைவாக, இந்த நாடுகளில்விவசாயப் புரட்சியானது ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளடக்கத்தை மேலும் அதிகரித்துக் கொண்டு இருக்கின்றது. இதன் விளைவாக, புதியவகையான ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களும், கிளர்ச்சிகளும், கல்கங்களும் எழுந்து கொண்டிருக்கின்றன.

முதலாளித்துவ ஜனநாயகத்தில் நிலவியிருந்த மதிப்புகள் கூட இன்று தாழ்ந்திருப்பதிலிருந்து, முதலாளித்துவத்தின் நசிவு தெளிவாக காட்டப்படுகின்றது. ஒருபுறம் ஏகாதிபத்தியம், நவகாலனிகள் உட்பட்ட எல்லா நாடுகளிலும் அரசு தலையீட்டின் மூலமாக முதலாளித்துவ பொருளாதார உறவுகளை விரிவாக்கிக் கொண்டிருக்கின்ற பொழுது, இன்னொரு புறத்தில், அது முதலாளித்துவத்திற்கு முந்தைய அரசியல், சமூக சக்திகளின் எல்லா வடிவங்களுடனும் கூட்டு ஏற்படுத்திக்கொண்டும் அவற்றை அதன் பிடியில் தன் வயப்படுத்திக் கொண்டும் இருக்கின்றது. இதுவரையில் வர்க்க உறவுகளில் இருந்த பகைமையை ஒன்று சேர்க்க முயற்சி செய்து கொண்டிருந்த அரசானது தனது நடுநிலைப் பாத்திரத்தையும் கை விட்டுவிட்டு, இப்பொழுது, மேலும் கூடுதலான சர்வாதிகாரத்தின் அப்பட்டமான வடிவத்தை எடுக்க ஆரம்பித்து இருக்கின்றது. முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை கட்டுப்படுத்தும் மற்றும் சமூக நல திட்டங்களை அமுல்படுத்தும் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு, இந்த அரசு, சந்தைக்கான விதிகளை அமுல்படுத்த அதன் அதிகார அமைப்பில் மேலும் மேலும் ஆணையிடக்கூடியதாக மாறிக் கொண்டிருக்கின்றது. உலகந்தழுவிய ஏகபோகங்கள் நிலவும் சூழ்நிலையில் பொருளாதார அதிகாரத்தின் ஏகபோகத்தை தவிரவும் வேறெதையும் அரசானது பிரதிநிதித்துவபடுத்திக் கொண்டிருக்கவில்லை.

இதனால்தான், முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பினால் கைவிடப்பட்டுக் கொண்டிருக்கிற முதலாளித்துவ ஜனநாயகத்தின் முன்னேறிய அம்சங்களை பாதுகாக்கும் பொறுப்பு, தொழிலாளி வர்க்கத்திடம் மேலும் கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளது. ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் இந்த போராட்டங்களும் கூட உலக அளவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் பணிகளுள் ஒரு முக்கிய பகுதியாக இன்று இருக்கின்றது.

இத்தகைய வளர்ச்சி போக்குகள், முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளில்

பாட்டாளிவர்க்க சோசலிச புரட்சிக்கும் நவகாலனியநாடுகளில் புதிய ஜனநாயக புரட்சிக்கும் கூடுதலான சாதகமான புறநிலைமைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

## *பாட்டாளி வர்க்க நிலைபாட்டை உயர்த்திபிடிப்போம்*

வழிகாட்டும் சித்தாந்தமாக மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை உயர்த்திப்பிடிப்பது என்பது எல்லா தளங்களிலும் பாட்டாளிவர்க்க அணுகுமுறையை உறுதியாக உயர்த்தி பிடிப்பதைக் கோருகின்றது.

இரண்டாம் அகிலத்தை சீரழித்த காவுத்ஸ்கிய சந்தர்ப்பவாதம் மற்றும் இரண்டாம் உலகப்போருக்கு முன்பு நிலவிய டிராட்ஸ்கியம், மற்றும் பல்வேறு இதர மார்க்சியத்திற்கு எதிரான போக்குகளைத் தொடர்ந்து, போருக்கு பிந்தைய காலத்தில் குருச்சேவிய, லின்பியோவிய, டெங்கிய, ஹாக்சோவிய மற்றும் இதர சந்தர்ப்பவாத குறுங்குழுவாத போக்குகள், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஆபத்தான பின்னடைவுக்குக் காரணமாகியிருந்தன. இத்தகைய எல்லா போக்குகளையும் எதிர்த்து சமரசமின்றி போரிடுவதன் மூலம் மட்டுமே, அவர்களால் முன்வைக்கப்பட்ட புதிய சகாப்த கருத்தாக்கம், மூன்று அமைதி தத்துவம், மூன்றுலகக் கோட்பாடு போன்றவைகளை அம்பலப்படுத்துவதன் மூலமாக மட்டுமே, கருத்தியல் அரசியல் வழியையும், உலக சோசலிச புரட்சிக்கான யுத்ததந்திர மற்றும் செயல்தந்திரங்களையும் விஞ்ஞான பூர்வமாக வளர்த்தெடுக்கப்பட முடியும்.

சர்வதேச கம்யூனிச இயக்கம் கடுமையான பின்னடைவுகளால் பாதித்திருக்கும் இந்த தறுவாயில், பாட்டாளிவர்க்க இயக்கத்தை நிராயுதபாணியாக்குவதற்காகவும், அதை முதலாளித்துவ கருத்தியல்கள் அல்லது சிறுமுதலாளித்துவ சந்தர்ப்பவாதத்தின் வாலாக மாற்றுவதற்கும் பாட்டாளிவர்க்க அணுகுமுறையை முழுவதுமாக கைவிட்டுவிட்டு, மார்க்சிய -லெனினியத்தின் பெயரால், ஏகாதிபத்திய முகாமின் தூண்டுதலினால், எண்ணற்ற கருத்தியல்களும், கருத்தாக்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய அனைத்து வேறுபட்ட கருத்தாக்கங்களின் அடிப்படைத் தன்மையானது, அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுதல் மற்றும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்ற கருத்தாக்கங்களை கைவிடுவதாகும். பாட்டாளிவர்க்கம் ஒரு புரட்சிகர வர்க்கம் என்பது இல்லாமல் போய்விட்டது என்று அவர்கள் கற்பிக்கிறார்கள். அவர்களில் பலர், புரட்சிக்கு புதிய தலைமையை மற்ற வர்க்கங்களிலிருந்தும், பிரிவுகளிலிருந்தும் தேடுபவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் சிலர், ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள எல்லா வெள்ளையரான பாட்டாளிவர்க்கமும் தொழிலாளிவர்க்க உயர்குடிகளாக மாறிவிட்டிருக்கின்றனர் என்றும் புரட்சிக்கு தலைமையேற்க அவர்களுக்கு தகுதியில்லை என்றும் வாதிடுகின்றனர். நிறவாதம், சாதியம், (இந்தியாவில் இருப்பது போன்று) மத அடிப்படைவாதம், பெண்ணடிமைத்தனம், சுற்றுப்புறசூழல் அழிவு, தேசிய இனப்பிரச்சனை போன்றவைகளுக்கான தீர்வானது வர்க்க பார்வையற்ற நிலைபாடுகளிலிருந்து முன்வைக்கப்படுகின்றன. சுருங்க கூறினால் இத்தகைய எல்லா போக்குகளும், வர்க்க அணுகுமுறை மற்றும் வர்க்க போராட்ட பாதை பற்றிய மார்க்சிய, லெனினிய அடிப்படை போதனைகளை கைவிட்டுள்ளன. இத்தகைய எல்லா சீர்த்திருத்தவாத சந்தர்ப்பவாத போக்குகளை எதிர்த்த உறுதியான போராட்டத்தின் போக்கில் மட்டும்தான், உலக சோசலிச புரட்சிக்கு தலைமை தாங்குவதற்கான புதிய அகிலமானது கட்டமைக்கப்பட முடியும்.

சர்வதேசிய அளவில் உலக ஏகாதிபத்திய அமைப்பை எதிர்த்து போரிடுவதற்காக ஒரு பரந்த, நிகழக்கூடிய ஒற்றுமை இன்று தேவையாக இருக்கிறது. ஏகாதிபத்திய அமைப்பை ஒட்டுமொத்தமாக துடைத்தெறிவதற்காக இந்த போராட்டத்தை உணர்வுபூர்வமாக முன்னுக்கு கொண்டுவரவும், சோசலிசபுரட்சியின் உலகந்தழுவிய வெற்றியை பெறவும் ஒரு சரியான கருத்தியல் அரசியல் வழியும் அதை மையப்படுத்திய ஒரு அணிதிரட்டலும் அடிப்படையான முன்நிபந்தனைகளாகும். இந்த மார்க்சிய லெனினிய கருத்தியல் அரசியல் வழியை வந்தடைவதற்காக, சர்வதேசிய அளவில் ஆரோக்கியமான கருத்தியல் போராட்டமானது வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு அகிலம் இல்லாமலிருப்பதையும், தத்துவம் மற்றும் நடைமுறை ஆகிய இரண்டு தளங்களிலும் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தினால் எதிர்கொள்ளப்பட்டிருக்கும் சவால்களின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, உடனடியாக சர்வதேசிய அமைப்பு ஒன்றை அமைப்பதில் எந்த ஒரு முன்யோசனையற்ற அவசரமான முயற்சிகளை மேற்கொள்ளக் கூடாது. அதே சமயம், 1970களின் பின்பகுதியில் மார்க்சிய-லெனினிய கட்சிகள் மற்றும் அமைப்புகளில் தொடங்கப்பட்ட முயற்சிகளை தொடர்ந்து மார்க்சிய-லெனினிய கட்சிகள் மற்றும் அமைப்புகளின் ஒரு மேடையை (Platform) அமைப்பதை நோக்கி இட்டுசெல்லும், சர்வதேசிய அளவில் சகோதர உறவுகளை மேம்படுத்த உதவும் இந்த முயற்சிகள் செய்யப்பட வேண்டும்.

1997, ஏப்ரல் மாதத்தில் நடந்த நான்காம் அனைத்திந்திய மாநாட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசிய மாற்றங்கள் குறித்த இந்த ஆவணமானது இன்றைய சர்வதேச சூழலின் அடையாளமானது ஏகாதிபத்தியமுறை, வளரும் நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருக்கிறது என்ற அடிப்படைக் கூற்றிலிருந்தும், பாட்டாளி வர்க்க சக்திகளின் முன்னேற்றத்திற்கு சாதகமான புறநிலைமைகள் மேலும் அதிகமான அளவிற்கு பெருகிக் கொண்டிருக்கிறது என்பதிலிருந்தும் தொடங்குகிறது. உலகலாவிய அளவில் ஏகாதிபத்திய முறை முன்தள்ளியுள்ள சவால்களை சந்திப்பதற்கு சர்வதேச கம்யூனிச இயக்கத்தை (ICM) புனரமைக்க வேண்டும் என்ற ஒரு பொது இணக்கமும் கூட சர்வதேச அளவில் உள்ள மார்க்சிய-லெனினிய சக்திகளுக்கிடையில் ஏற்பட தொடங்கியுள்ளது. இத்தகைய கூற்றுக்களிலிருந்து இந்த ஆவணம் இன்றைய சர்வதேச சூழலைப் பற்றிய பகுப்பாய்வு குறித்து ஒரு அடிப்படை அணுகுமுறையை முன் வைத்துள்ளது. மேலும் கடந்த 50 ஆண்டு கால சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் மற்றும் கோமின்டர்ன் கலைக்கப்பட்டு விட்ட பிறகான கம்யூனிச இயக்கத்தின் அனுபவங்களை மதிப்பீடு செய்வதற்கான ஒரு தொடக்கத்தையும், ஒரு புதிய கம்யூனிஸ்டு அகிலத்தை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளையும் இந்த ஆவணம் முன் வைக்கின்றது.

நன்கொடை ரூ. 10.00